வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu

Email : eelanaduweekly@gmail.com
மலர் : 05
29.12.2023 வெள்ளிக்கிழமை
இதழ் : 363
பக்கங்கள் : 12



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி,
வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

# ஜனவரி 10 சம்பந்தன் வீட்டில் அரசியல் குழு முக்கிய கூட்டம்

## தேசிய மாநாட்டு சர்ச்சைக்கு அன்றே இறுதி முடிவு

**யாழ்ப்பாணம், டிசெம்பர் 29**

**இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் அரசியல் செயல்குழுக் கூட்டத்தை எதிர்வரும் 10ஆம் திகதி பெரும் தலைவர் இரா. சம்பந்தனின் வீட்டில் நடத்தி கட்சியின் தேசிய மாநாட்டு சர்ச்சைக்கு தீர்வு காண்பதென இலங்கை தமிழ் அரசுக் கட்சி தீர்மானித்துள்ளது.**

நேற்று யாழ்ப்பாணம் மார்ட்டின் வீதியிலுள்ள கட்சி அலுவலகத்தில் நடந்த சந்திப்பில் இந்த தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.


தமிழரசு கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா தலைமையில் நேற்று இந்த சந்திப்பு நடந்தது.

திருகோணமலை மாவட்டத்திலுள்ள கட்சியின் வட்டார, தொகுதிக் கிளைகளுக்கான தெரிவில் கனடா பணம் தாராளமாக விளையாடி, முறையற்ற விதமாக நியமனங்கள் நடந்ததாக எழுந்த குற்றச்சாட்டையடுத்தும், இரா. சம்பந்தனை தவிர்த்து குகதாசனை முன்னிறுத்த ஒரு தரப்பு முற்படுவதையடுத்தும் கட்சியின் தேசிய மாநாட்டு விவகாரம் சர்ச்சையாகியுள்ளது.

திருகோணமலை கிளைகளை மீள புனரமைக்காமல் கட்சியின் தேசிய மாநாட்டை நடத்த வேண்டாமென இரா.சம்பந்தன் கடிதம்

11

# விஜயகாந்த் மறைந்தார்



சென்னை, டிசெ. 29

பிரபல தமிழ் திரையுலக நடிகரும் தேசிய முற்போக்கு திராவிடர் கழகத்தின் தலைவருமான விஜயகாந்த் (வயது 71) நேற்று வியாழக்கிழமை காலமானார்.

அண்மைக்காலமாக தொடர் மருத்துவ பராமரிப்பில் இருந்த விஜயகாந்த் நுரையீரல் அழற்சி, கொரோனா தொற்று காரணமாக மருத்துவமனையில் உயிரிழந்தார்.

விஜயகாந்தின் பூதவுடலுக்கு தமிழக முதல்வர் மற்றும் அரசியல் கட்சிகளின் தலைவர்கள், திரையுலக பிரபலங்கள் நேரில் அஞ்சலி செலுத்தினர். இந்திய பிரதமர் உள்ளிட்ட பலரும் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

11

# அத்தியாவசியப் பொருட்கள் சிலவற்றின் விலை குறைப்பு

கொழும்பு, டிசெ. 29

அத்தியாவசிய பொருட்கள் சிலவற்றின் விலைகளை குறைப்பதற்கு சதொச நிறுவனம் தீர்மானித்துள்ளது.

இதன்படி, ஆறு அத்தியாவசிய பொருட்களின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளன.

இன்று முதல் அமுலாகும் வகையில் இந்த விலை குறைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதற்கமைய ரின் மீன் ஒன்றின் விலை 55 ரூபாயால் குறைக்கப்பட்டு 475 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படவுள்ளது.

11

# கேக் விற்பனை வீழ்ச்சி

கொழும்பு, டிசெ. 29

இம்முறை பண்டிகைக் காலத்தில் கேக் விற்பனை பெரியளவில் வீழ்ச்சியடைந்துள்ளதாக அகில இலங்கை வெதுப்பக உற்பத்தியாளர்கள் சங்கத்தின் தலைவர் என். கே. ஜெயவர்த்தன தெரிவித்துள்ளார்.

நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடி காரணமாக இந்த ஆண்டு நத்தார் பண்டிகை காலத்தில் கேக் விற்பனை 25 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இறக்குமதி செய்யப்பட்ட முட்டைகள்

11

# பிரச்னைகளுக்கு தீர்வு காண முயன்றால் அரசுடன் இணைந்து செயல்படத் தயார்!

## கர்தினால் மல்கம் ரஞ்சித் கூறுகிறார்



கொழும்பு, டிசெ. 29

நீதித்துறையின் தீர்மானத்தின்படி பிரச்னைகளுக்கு தீர்வு காண முயற்சித்தால் அரசாங்கத்துடன் இணைந்து செயல்படுவதற்கு திருச்சபை தயாராக உள்ளது என கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

நீதித்துறை வழங்கிய தீர்ப்புகளின்படி அரசாங்கம் செயல்பட்டால், அரசாங்கத்துடன் இணைந்து பணியாற்றுவதில் எங்களுக்கு எந்தப் பிரச்னையும் இல்லை என்று கர்தினால் குறிப்பிட்டுள்ளார்.

எனினும், இந்த அரசாங்கம் நீதித்துறை வழங்கிய பல தீர்ப்புகளை புறக்கணித்துள்ளது என்றும் கர்தினால் சுட்டிக்காட்டியுள்ளார்.

2019ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பாக முன்னர் பதவியில் இருந்த அரசாங்கங்களின் செயல்பாடுகளை கர்தினால் விமர்சித்துள்ளார்.

முன்னைய நல்லாட்சி அரசாங்கம், தாக்குதல்களைத் தடுக்கத் தவறியதாகவும் தற்போதைய ஆட்சி தாக்குதலைத் திட்டமிட்டவர்களை சட்டத்தின் முன் நிறுத்தத் தவறியுள்ளதாகவும் கர்தினால் குற்றம் சுமத்தியுள்ளார்.

(அ)

# புத்தாண்டில் நடைபெறவுள்ள முதல் அமைச்சரவை கூட்டம்

## திட்டங்களை சமர்ப்பிப்பார் ரணில்

கொழும்பு, டிசெ. 29

புத்தாண்டின் முதலாவது அமைச்சரவைக் கூட்டம் எதிர்வரும் திங்கட்கிழமை பிற்பகல் நடைபெறவுள்ளது.

இதன்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க புதிய ஆண்டுக்கான வேலைத்திட்டங்களை அமைச்சரவையில் சமர்ப்பிக்க உள்ளார் எனத் தெரியவருகிறது.

இந்த அமைச்சரவை கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு

11

# புற்றுநோயாளர்களுக்கான கதிரியக்க சிகிச்சை பாதிப்பு

கொழும்பு, டிசெ. 29

புற்றுநோயாளர்களுக்கு வழங்கப்படும் கதிரியக்க சிகிச்சை சேவை தற்போது பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக வைத்தியர்களின் ஒன்றிணைந்த தொழிற்சங்க கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

வைத்தியசாலைகளில் கதிரியக்க சிகிச்சை இயந்திரங்கள் பழுதடைந்துள்ளமையே இதற்கு காரணம் என குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்படி, அபெக்ஷா மற்றும் மட்டக்களப்பு வைத்தியசாலைகளில் தலா ஒரு கதிரியக்க சிகிச்சை இயந்திரமும் கண்டி தேசிய வைத்தியசாலையில் இரண்டு கதிரியக்க சிகிச்சை இயந்திரங்களும் பழுதடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக, சிகிச்சைகளுக்காக வருகை தரும் நோயாளர்களும் பெரும் சிரமங்களுக்கு உள்ளாகி வருகின்றனர்.

# யாழில் தீவிரமாகும் டெங்குக் காய்ச்சல்

## மேலதிக பொதுச் சுகாதார பரிசோதகர்கள் வரவழைப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 29

யாழ்ப்பாணத்தில் டெங்கு நோய் தீவிரமடைந்துள்ள நிலைமையை கட்டுப்படுத்த அயல் மாவட்டங்களிலிருந்து பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களை வரவழைக்க நடவடிக்கை எடுக்கவுள்ளதாக யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

நேற்று இடம்பெற்ற யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில்

11

# புத்தாண்டில் மக்கள் மீது மேலும் சுமைகளை சுமத்தவுள்ளது அரசு

கொழும்பு, டிசெ. 29

ஜனவரி மாதம் எரிபொருளுக்கு வற் வரி அறவிடப்படவுள்ளதால் அதன் விலைகளில் ஏற்படும் மாற்றங்கள் குறித்து நிதி அமைச்சு விளக்கம் அளித்துள்ளது.

2024ஆம் ஆண்டுக்கான வரவு - செலவு திட்டத்தில் வற் வரியை (பெறுமதி சேர் வரி) 15 வீதத்தில் இருந்து 18 வீதமாக அரசாங்கம் உயர்த்தியுள்ளது. இதனால் நாட்டில் பொருட்கள் மற்றும் சேவைகளின் விலைகள் பெருமளவில் உயர்வடையும் என பொருளாதார நிபுணர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இந்நிலையில், எரிபொருள் மற்றும் எரிவாயு விலைகளில் வற் வரி ஏற்படுத்தப்போகும் தாக்கல் குறித்து கருத்து வெளியிட்ட நிதி அமைச்சின் வரிக் கொள்கை

11

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

## இப்படியும் நடக்கிறது

இரண்டாயிரத்து பதினைந்தாம் ஆண்டு ஜனாதிபதி தேர்தல் நடந்து முடிந்த சில மாதங்களில் பாராளுமன்றத் தேர்தல் நடைபெற்றது. அந்தத் தேர்தலில் முதல்தடவையாக போட்டியிட்ட மதியாபரணம் ஆபிரகாம் சுமந்திரன் டான் ரீ. வியில் ஒரு பேட்டியில் கலந்துகொண்டிருந்தார். அந்தப் பேட்டியை அவரோடு நடத்தியவர் டான் குழுமத்தின் தலைவர் குகநாதன்.

அப்போது அவர் கேட்டார், கடந்த ஜனாதிபதித் தேர்தலில் பொதுவேட்பாளராக களம் இறங்கிய மைத்திரிபால சிறிசேனவை ஆதரிப்பதற்குப் பதிலாக ஒரு தமிழ் வேட்பாளரை நிறுத்தியிருந்தால் நல்லதல்லவா? என்று.

அதற்கு சுமந்திரன் பதிலளித்த போது 'அது நல்லதுதான். அந்த யோசனையை பலரும் முன்வைத்தனர். ஆனால், சம்பந்தன் ஐயா அது நல்ல யோசனைதான் என்றாலும், இப்போது நமது குறி, ராஜபக்ஷக்களைத் தோற்கடிப்பதுதான். அப்படியொரு முயற்சியில் ஈடுபடுவதன் மூலம் ராஜபக்ஷவுக்கு சின்ன ஒரு சந்தர்ப்பத்தையும் கொடுக்கக் கூடாது என்பதுதான் அவரது ஒரே குறிக்கோளாக இருந்தது' என்று.

இப்போது ஜனாதிபதி 'ரேசில்' ராஜபக்ஷக்கள் இல்லை. அவர்களைத் தேற்கடிக்கவேண்டும் என்பதற்காக யுத்தத்துக்கு தலைமை தாங்கிய சரத் பொன்சேகாவையென்றாலும் ஆதரிக்கவேண்டும் என்ற நிலையில் தமிழ் மக்கள் இல்லை.

எப்போதுமே கடைசி நேரத்தில் முடிவெடுப்பதே சம்பந்தன் ஐயாவின் 'ஸ்ரைல்'.

அது ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லா தீர்மானமாக இருந்தாலும் சரி. பாராளுமன்றத்தில் ஜனாதிபதி தேர்தலுக்காக வாக்களிப்பதாக இருந்தாலும் சரி. அவர் முதல் நாளில் அல்லது அன்று காலையில்தான் முடிவெடுப்பது வழக்கம்.

ஆனால், அப்படியில்லாமல் தமிழ் மக்களுக்கு எது சரியானது என்பது குறித்து அனைத்து தரப்பினரதும் அபிப்பிராயங்களை அறிந்து, அதுகுறித்து சாதக, பாதகங்களை ஆராய்ந்து முடிவெடுப்பது அவருக்கு தெரியாத ஒன்று, அதற்குக் காரணம் தனக்கு எல்லாம் தெரியும் என்று அவர் கருதுவதாலோ தெரியவில்லை.

ஆனால், நான் மேலே சொன்னதுபோல, பதினைந்து தேர்தலில் நாம் போட்டியிட்டிருக்கலாம்தான், ஆனால், ராஜபக்ஷக்களை தோற்கடிக்கவேண்டும் என்பதுதான் எங்கள் எல்லோருடைய ஒரே குறிக்கோளாக இருந்தது என்று சுமந்திரன் சொல்லியபோது அவர் இருந்தது, ராஜபக்ஷக்களுடன்.

அவருக்கு இவை இல்லாம் தெரிந்திருக்க நியாயமில்லைத்தான். ஆனால் அவர் சொல்கிறார், 'ஜனாதிபதி வேட்பாளராக, தமிழர் ஒருவர் போட்டியிட வேண்டும் என பேசுபவர்கள், தமிழ் மக்களின் நலனுக்காக செயலபடவில்லை எனவும் தங்கள் அரசியல் நலனுக்காகவே செயலபடுகின்றனர்' என்று,

ஜனாதிபதி தேர்தலில் போட்டி எப்படியிருக்கும்? யார் யாருக்கிடையே முக்கிய போட்டி இருக்கும்? அவர்களில் யாருக்கு வெற்றி வாய்ப்பு அதிகமாக இருக்கும் என்பவை பற்றி எதுவும் தெரியாத நிலையில் அவர்கள் இன்னமும் அதுகுறித்து- அதாவது யாருக்கு ஆதரவு வழங்குவது என்பது குறித்து இன்னமும் முடிவெடுக்கவில்லை என்பது தமிழ் மக்களுக்குத் தெரிந்ததுதான்.

சஜித் பிரேமதாஸவுக்கும், நாங்கள்தான் அரசியல் ஆலோசகர்கள். ரணில் தரப்போடும் உலகத் தமிழர் பேரவை ஊடாக அவரை அணுகிக் கொண்டுதான் இருக்கின்றோம். இந்த நிலையில் தமிழ் வேட்பாளர் என்ற விடயத்தில் தலையை நுழைத்து, அது தமிழ் மக்களின் ஏகோபித்த முடிவாக வந்துவிட்டால், பின்னர் வெற்றிபெறக்கூடிய ஒருவரோடு எப்படி பேரம்பேசுவது என்ற கவலை சிலருக்கு இருப்பதில் தவறில்லைத்தான். அது அவர்களின் தனிப்பட்ட நலனுக்கு பாதகமாகவும் முடிந்துவிடலாம்.

அந்தப் பதற்றம்தான், மற்றவர்கள்மீது அவசரப்பட்ட கல்லெறியத் தோன்றியதோ தெரியவில்லை.

ஒவ்வொரு ஜனாதிபதி தேர்தலிலும் ஒரு வேட்பாளரை ஆதரிப்பதற்கு முன்னதாக அவர்களுடன் பேச்சு நடத்தி சில விடயங்களில் உடன்பாடு எட்டுவதும் அந்த உடன்பாடு குறித்து பகிரங்கமாகத் தெரிவித்தால் அவருக்கு சிங்கள வாக்குகள் கிடைக்காது போய்விடும் என்று கூறிக்கொண்டு அதைப் பற்றி வெளியே சொல்லாமல் மறைப்பதும் எந்த சந்தர்ப்பத்திலும் தமிழ் மக்களுக்கு உதவப்போவதில்லை.

எவர் ஒருவர் ஆகக்குறைந்த ஒரு தீர்வைத் தந்தாலும் அதனை பகிரங்கமாக தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவித்து அதற்காக மக்கள் ஆணையை பெற்றால் மாத்திரமே அவரால் அந்தத் தீர்வைத் தரமுடியும்.

உதாரணமாக ஒருவர் பதின்மூன்றை முழுமையாக அமுல்படுத்துவேன் என்று சொன்னால், அதனை அவர் பகிரங்கமாக சொல்லவேண்டும். அதனை அமுல்படுத்தி இந்தப் பிரச்னையைத் தீர்க்காவிட்டால் இந்த நாட்டை நல்லமுறையில் கொண்டுசெல்லமுடியாது என்பதை சிங்கள மக்களுக்கு புரியவைத்து அவர்களின் ஆதரவை பெறமுடியாத எந்தத் தலைவராலும் இந்தப் பிரச்னையை தீர்க்க முடியாது.

எனவே, அடுத்த தேர்தலை தமிழ் மக்கள் எப்படி எதிர்கொள்ள வேண்டும் என்பது ஒரு சில அரசியல் 'கற்றுக்குட்டிகள்' முடிவெடுக்கின்ற விடயம் அல்ல. அது அனைத்து தமிழ்கட்சிகளும், சிவில் சமூக பிரதிநிதிகளும் ஆறுஅமர இருந்து கூடிப்பேசி முடிவெடுக்க வேண்டிய விவகாரம்.

- ஊர்க்குருவி.

# விவசாயத்துறையில் தொழில் வாய்ப்புகள் பெற்ற மற்றுமொரு குழு இஸ்ரேல் பயணம்

கொழும்பு, டிசெ. 29

இஸ்ரேலில் விவசாயத் துறையில் ஒரே முறையில் ஆகக்கூடிய எண்ணிக்கையில் தொழில் வாய்ப்புகளை பெற்ற, 211 பேரைக் கொண்ட மற்றுமொரு குழுவினர் விசேட விமானம் மூலம் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்திலிருந்து இஸ்ரேலுக்கு பயணமானார்கள்.

இஸ்ரேலுக்கு செல்லும் இவர்களை தெளிவுபடுத்துவதற்காக விசேட நிகழ்ச்சியொன்று இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

சூம் தொழில்நுட்பம் மூலம் இதில் கலந்துகொண்ட தொழில மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார இஸ்ரேல் செல்லும் குழுவினருக்கு வாழ்த்துகளை தெரிவித்தார்.

இந்த தொழில் வாய்ப்பின் மூலம் பெறப்படும் பணத்தின் ஊடாக தமது குடும்ப பொருளாதாரத்தை மேம்படுத்த நடவடிக்கை மேற்கொள்வதுடன், சட்ட விதிகளுக்கு அமைவாக வங்கி கட்டமைப்பு ஊடாக பணத்தை அனுப்பி நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்த பங்களிக்க வேண்டும் என்றும் அமைச்சர் கேட்டுக்கொண்டார்.

இஸ்ரேலில் பணிபுரிபவர்கள் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்துவதாகவும், அதன் அடிப்படையில் நாட்டின் நற்பெயரை மேம்படுத்துவதற்காக தார்மீகக் கடமையை முன்னெடுப்பதன் அவசியத்தையும் அமைச்சர் இதன் போது வலியுறுத்தினார். (அ)

# யாழ். ஒருங்கிணைப்பு கூட்டத்தின்போது சபையின் நடுவில் வந்தவரினால் பரபரப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 29

இந்திய கடற்றொழிலாளர்கள் இலங்கை கடற்பரப்பில் அத்துமீறல் விவகாரம் தொடர்பாக பேசப்பட்டபோது யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் கடும் வாக்குவாதம் ஏற்பட்டது.

கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் இடையே தர்க்கம் ஏற்பட்டது.

இதன்போது ஒரு கட்டத்தில் கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களை விமர்சித்து உரையாற்றிக் கொண்டிருந்த நபர் திடீரெனக் கூட்டத்திற்கு நடுவே வந்ததால் பரபரப்பு ஏற்பட்டது.

இதனையடுத்து அங்கு வந்த பாதுகாப்பு உத்தியோகத்தர்களால் நிலைமை கட்டுக்குள் வந்தது.

அமைச்சர் கட்சி ஆதரவாளர்களை அழைத்து கட்சி கூட்டத்தை நடத்துவதாக பாராளுமன்ற உறுப்பினர்கள் இதன்போது குற்றம்சாட்டினர்.

அதற்கு அமைச்சர், குறித்த நபர் பொது அமைப்பை சேர்ந்தவர் எனத் தெரிவித்து சர்ச்சைக்கு முற்றுப்புள்ளி வைத்தார்.

கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறீதரன், தர்மலிங்கம் சித்தார்த்தன் மற்றும் செல்வராஜா கஜேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர். (அ)

# வீடமைப்பு திட்டம் நாடளாவிய பிரச்னை ஆராயப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும்

## அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 29

வீடமைப்பு திட்டம் என்பதும் அதற்கான நிதி ஒதுக்கீடும் நாடளாவிய பிரச்னையாக உள்ளதால் அது தொடர்பில் ஆராயப்பட்டு நடவடிக்கை எடுப்பதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெவித்துள்ளார்.



நேற்று வியாழக் கிழமை யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புகுழுக் கூட்டம் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடைபெற்றது.

இதன்போது நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் வீட்டுத்திட்டப் பயனாளர் தொடர்பில் ஆராயப்பட்டது. இதன்போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள வீட்டுத் திட்டங்களின் முன்னேற்ற நகர்வுகள் தொடரில் பல்வேறு கருத்துகள் முன்வைக்கப்பட்டு ஆராயப்பட்டது.

இந்நிலையில் 5 மில்லியனுக்கே வீடு கட்ட முடியாதென குறைகூறிக் கொண்டிருக்கும் மாவட்டமாக யாழ்ப்பாணம் இருக்கின்றது என வடக்கு மாகாண ஆளுநரும் ஒருங்கிணைப்பு குழுவின் இணைத் தலைவருமான திருமதி பி. எஸ். எம். சார்ள்ஸ் குற்றம் சாட்டியுள்ளார்.

குறிப்பாக ரூ. 10 இலட்சம் திட்டத்துக்கு 403 பயனாளரும் 6 இலட்சம் திட்டத்திற்கு 101 பயனாளரும் கோரியுள்ளதாக துறை சார் அதிகாரிகளால் சுட்டிக்காட்டப் பட்டது.

இதில் ஆறு இலட்சம் ரூபாய் திட்டம் என்பது தற்போதைய சூழ் நிலையில் சாத்தியமானதல்ல. இதனை குறைந்தது ரூ. 15 இலட்சமாக உயர்த்தவேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கப்பட்டதுடன் அதுவரை குறித்த இரு திட்டங்களுக்கும் அனுமதி வழங்கக்கூடாதெனவும் வலியுறுத்தப்பட்டது.

இதேநேரம் எந்தவொரு திட்டமும் பயனாளரின் விருப்பின்றி வழங்கப்படாது என சுட்டிக்காட்டிய ஆளுநர், மற்றொரு திட்டமான 25 ஆயிரம் சூரிய மின்கலம் பொருத்திய வீட்டு திட்டத்திற்கு பயனாளிகள் பட்டியல் கிடைக்கவில்லை என்றும், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கவனத்துக்கு கொண்டு சென்ற பின்னரே அவர் பிரதேச செயலர்களுடன் அது தொடர்பில் கலந்துரையாடி தெளிவுறுத்திய பின்னர் அதற்கான பயனாளர்கள் தெரிவு நடைபெற்று வருவதாகவும் சுட்டிக்காட்டியிருந்தார்.

இதேவேளை யாழ்ப்பாணத்தில் சுமார் 16 ஆயிரம் பேர் வீடு அற்றவர்களாக இருக்கின்ற நிலையில் இதில் 10ஆயிரம் வீட்டு திட்டத்தை யாழ்ப்பாணத்துக்கு கொடுத்துள்ளதாகவும் அதற்காக இதுவரை 8,957 பேரது பெயர்கள் தற்போது கிடைத்துள்ளதாகவும் அவர் தெரிவித்திருந்தார். ஆனாலும் இந்த வீட்டு திட்டம் யாழில் சாத்தியம் இல்லை என்று மக்களை குழப்பும் நிலை காணப்படுகின்றது. சுமார் 1000 சதுர அடி கொண்ட குறித்த வீட்டுத் திட்டமானது கூரை சூரிய மின்கலம் பொருத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் சுடிக்காட்டப்பட்டது.

ஈழநாடு
Eelanadu
29.12.2023 வெள்ளிக்கிழமை
சோபகிருது வருடம், மார்கழி 13

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# விலை போதல் என்றால் என்ன?

தமிழ் மக்கள் ஜனாதிபதி தேர்தலை பகிஷ்கரிக்க வேண்டும். விலைபோனவர்களே தமிழ் பொது வேட்பாளரை நிறுத்த வேண்டும் என்று கோருகின்றனர் - இவ்வாறு அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்திருக்கின்றார்.

ஜனாதிபதி தேர்தலை எதிர்கொள்ளும் ஓர் உத்தியாக பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவது தொடர்பில் யோசிக்கலாம், என்னும், பரிந்துரையை முன்வைத்த கட்சிகள் மற்றும் சிவில் சமூக பிரதிநிதிகள் அனைவரையும் காங்கிரஸ் (முன்னணி) கட்சி விலைபோனவர்கள் என்று குறிப்பிடுகின்றது.

தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவதா அல்லது இல்லையா என்னும் முடிவானது அனைத்துக் கட்சிகளினதும் இணக்கத்தில்தான் தங்கியிருக்கின்றது. இதுவரையில் இது சாத்தியமானாகத் தெரியவில்லை. ஏனெனில், கட்சிகள் மத்தியில் இந்த விடயத்தில் ஆகக் குறைந்தது ஓர் உரையாடல்கூட இடம்பெறவில்லை.

யுத்தம் முடிவுற்றதன் பின்னரான காலப்பகுதியில் மூன்று ஜனாதிபதி தேர்தல்கள் நடைபெற்றிருக்கின்றன. இந்த மூன்று தேர்தல்களின்போதும் தமிழ் மக்கள் தென்னிலங்கையின் வேட்பாளர்களுக்கே வாக்களித்திருக்கின்றனர். ஜனாதிபதி தேர்தலைப் பொறுத்தவரையில் தமிழ் மக்களுக்கு முன்னாலுள்ள தெரிவும் அது ஒன்றுதான். இந்த மூன்று தேர்தல்களின்போதும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தேர்தலை பகிஷ்கரிக்குமாறே மக்களைக் கோரினார். ஆனால், அவரின் கருத்தை மக்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. இந்த விடயத்தில் தமிழ் மக்கள் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியை (தமிழ் தேசிய மக்கள் முனன்ணி) ஒரு விடயமாக எடுத்துக்கொள்ளவில்லை. மாறாக, தமிழ் தேசியக் கூட்டமைப்பின் கோரிக்கைக்கு அமைவாகவே வாக்களித்திருந்தனர்.

மேற்படி மூன்று தேர்தல்களின்போதும் தமிழ் மக்களின் வாக்களிப்புக்கு ஓர் இலக்கு இருந்தது - அதாவது, ராஜபக்ஷக்களை தோற்கடிப்பது. இந்த அடிப்படையில்தான், தமிழ் மக்கள் இறுதி யுத்தத்தை வழிநடத்திய இராணுவத் தளபதிக்கும் வாக்களித்தனர். இந்த மூன்று தேர்தல்களின்போதும், 2015இல் மட்டும்தான், தமிழ் மக்களின் வாக்குகள் ஆட்சி மாற்றத்துக்குப் பங்களித்திருந்தது. ஆனாலும் எதிர்பார்த்தவாறு, அரசியல் தீர்வு நோக்கிய பயணத்தில் எவ்வித முன்னேற்றங்களும் ஏற்படவில்லை.

இவ்வாறானதொரு பின்புலத்தில்தான் நான்காவது ஜனாதிபதி தேர்தலை எவ்வாறு எதிர்கொள்வது என்னும் கேள்வி எழுந்திருக்கின்றது. தேர்தலை பகிஷ்கரியுங்கள் என்று கூறினால், மக்கள் அதை செய்யப் போவதில்லை. இந்த நிலையில் தேர்தலை எவ்வாறு கையாளலாம் என்னும் கேள்விக்குப் பதிலாகவே தமிழ் பொது வேட்பாளர் யோசனை தொடர்பில் சிந்திக்கப்பட்டது. எனினும், தமிழத் தேசிய கட்சிகள் மத்தியில் ஓர் இணக்கப்பாடு ஏற்படாமல் அது சாத்தியப்படப் போவதில்லை.

நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலை பேரம் பேசுவதற்கான ஒரு துருப்புச் சீட்டாகப் பயன்படுத்திக் கொள்ள முடியுமா என்னும் கேள்விதான் இங்கு முக்கியமானது. தமிழத் தேசிய கட்சிகளின் பிரதான இலக்கு என்ன? பதில் - தமிழ் மக்களின் அரசியல் நலன்களை வெற்றிகொள்வது - இதுதான் விடயம் என்றால், வாய்ப்புக்கள் ஒவ்வொன்றையும் சாதகமாக பரிசீலிப்பதில் என்ன தவறுண்டு? இதில் விலைபோவதற்கு என்ன இருக்கின்றது. அவ்வாறாயின் தேர்தலைப் பகிஷ்கரிக்குமாறு கூறுவதைக்கூட விலை போதலாக எண்ண முடியுமல்லவா?

### உடுப்பிட்டி மதுபானசாலை விவகாரம்

## யாழ். மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் எதிரொலித்தது

வடமராட்சி, டிசெ. 29

உடுப்பிட்டியில் மக்கள் எதிர்ப்பையும் மீறி அமைக்கப்பட்டுள்ள மதுபானசாலை உடனடியாக மூடப்பட வேண்டும் என்று நேற்று வியாழக்கிழமை நடந்த யாழ். மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரனால் மாவட்ட ஒருங்கிணைப்பு குழு தலைவரும் கடற்றொழில் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தாவிடம் கோரிக்கை விடப்பட்டது.

இதற்கு பதிலளித்த அமைச்சர்,

இதனை மூடுவது தொடர்பில் உடுப்பிட்டியில் உள்ள சமூக அமைப்புகள் நீதிமன்றத்தை அணுகுவதே நல்லது எனத் தெரிவித்தார்.

இந்தப் பிரச்னையை தீர்க்க மக்கள் நீதிமன்றத்தை அணுக வேண்டுமெனில் எதற்கு மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம். மக்கள் நலனுக்கு மாறாக ஏன் செயல்படுகின்றீர்கள் எனவும் என கஜேந்திரன் எம். பி. கேள்வி எழுப்பினார்.

இதற்கு தான் விரைவில் நல்லதொரு தீர்வை காண்பதாக அமைச்சர் உறுதியளித்துள்ளார்.

ஏற்கனவே, கடந்த ஒருங்கிணைப்பு குழு கூட்டங்களிலும் இந்த விடயம் பேசப்பட்டதுடன் ஓரிரு வாரங்களுக்குள் இதற்கு நல்லதொரு தீர்வு தருவதாக கூறிய நிலையில் ஒரு மாதம் கடந்தும் தீர்வின்றி இந்த விவகாரம் இழுபட்டு செல்கின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ-02)

## இந்த வருடத்தில் நாட்டை விட்டு வெளியேறிய 800 பேராசிரியர்கள்

கொழும்பு, டிசெ. 29

இந்த வருடம் எண்ணூறுக்கும் மேற்பட்ட பல்கலைக்கழக பேராசிரியர்கள் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர்.

சுமார் ஆயிரம் பேர் வெளிநாடுகளில் விடுமுறையில் இருக்கின்றனர் என்று பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சங்க சம்மேளனத்தின் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட விரிவுரையாளர் சாருதத்த இளங்கசிங்க தெரிவித்தார்.

இதனால் பல்கலைக்கழக நடவடிக்கைகள் நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இந்த வருடத்தின் ஆரம்பத்தில் பல்கலைக்கழக பேராசிரியர்களின் எண்ணிக்கை 6,200 ஆக காணப்பட்டது. (அ)

## கம்பஹா வைத்தியசாலையில் கொரோனா மரணம் பதிவானது

கொழும்பு, டிசெ. 29

சுகயீனம் காரணமாக கம்பஹா மாவட்ட பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த நோயாளி ஒருவர் உயிரிழந்ததையடுத்து, அவரது மரணத்துக்கான காரணம் கோவிட் -19 நிமோனியா என தெரிய வந்துள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

யக்கலை பிரதேசத்தில் வசித்து வந்த 63 வயதுடைய பெண் ஒருவரே இவ்வாறு உயிரிழந்தார்.

பிரேத பரிசோதனையின்போது, அவர் கோவிட் -19 நிமோனியாவால் உயிரிழந்தாரென வைத்தியசாலையின் சட்ட வைத்திய அதிகாரியின் அறிக்கையின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டதாக கம்பஹா மரண விசாரணை அதிகாரி மருத்துவர் பி. பி. ஆர். பி. ராஜபக்ஷ தெரிவித்தார்.

பாதுகாப்பு ஏற்பாடுகளுடன் உயிரிழந்தவரின் சடலம் தகனம் செய்யப்பட்டதாக கம்பஹா மாநகர சபை தெரிவித்தது. (அ)

## டெங்கு தாண்டவம் 50 பேர் உயிரிழப்பு

### 85,636 பேர் பாதிப்பு

கொழும்பு, டிசெ. 29

நாட்டின் அனைத்து பகுதிகளிலுமிருந்து இதுவரை 85,636 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர் என்று சுகாதார அமைச்சின் தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த வருடத்தின் இதுவரையான காலப் பகுதியில் நாட்டில் 50 டெங்கு நோயாளர்கள் உயிரிழந்தனர். கடந்த வருடத்தோடு ஒப்பிடுகையில் இந்த வருடத்தின் இதுவரையான காலப் பகுதியில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை 12 ஆயிரத்தால் அதிகரித்துள்ளதாகவும் அந்த பிரிவின் உயரதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

கடந்த வருடம் டிசெம்பர் வரையிலான காலப்பகுதியில் நாட்டில் 72,903 டெங்கு நோயாளர்களே பதிவாகியிருந்த நிலையில் இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் அந்த எண்ணிக்கை 85,636 ஆக அதிகரித்துள்ளதாகவும் அந்த அதிகாரி தெரிவித்துள்ளார்.

இதேவேளை, யாழ்ப்பாண மாவட்டத்தில் டெங்கு நோய் வெகு வேகமாக அதிகரித்து வருவதாக அந்த மாகாணத்தின் சுகாதார சேவைகள் பணிப்பாளர் தமருத்துவர் த. சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

அந்த வகையில் கடந்த இரண்டு தினங்களுக்கு முன் யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த 11 மாத குழந்தையொன்று டெங்கு நோயினால் உயிரிழந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த வருடத்தில் உலக அளவில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை வெகுவாக அதிகரித்து காணப்படுவதாக குறிப்பிட்டுள்ள சுகாதார அமைச்சு, டெங்கு நோயிலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ளும் வகையில் சுற்றாடலை சுத்தமாக வைத்திருப்பதை உறுதி செய்யுமாறு பொதுமக்களை கேட்டுக் கொண்டுள்ளது. (அ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



**டிசெம்பர் - 29 வெள்ளிக்கிழமை**
**சோபகிருது வருடம் - மார்கழி 13**
**நல்ல நேரம் : 09.00 - 10.30**
**ராகு காலம் : 10.30 - 12.00**
**திதி : திரிதியை**



## இன்றைய ராசிபலன்

**மேடம்**
தைரியமாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். வியாபாரத்தில் போட்டிகளை எதிர்கொண்டு வெற்றி காண்பீர்கள். முன் வைத்த கோரிக்கைகள் நிறைவேறும். முயற்சியால் முன்னேறும் நாள்.

**இடபம்**
கடந்த 2 நாட்களாக இருந்த அலைச்சல், டென்ஷன் யாவும் நீங்கும். வியாபாரத்தில் புதிய சரக்குகள் கொள்முதல் செய்வீர்கள். புது வாய்ப்புகள் தேடி வரும். உற்சாகமான நாள்.

**மிதுனம்**
ராசிக்குள் சந்திரன் நீடிப்பதால் வேலைச்சுமை இருந்துக் கொண்டேயிருப்பதாக ஆதங்கப்படுவீர்கள். கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது. நாவடக்கம் தேவைப்படும் நாள்.

**கடகம்**
எடுத்த வேலையை முடிப்பதற்குள் அலைச்சல் அதிகரிக்கும். வாகனம் ஓட்டுவதில் மிகுந்த கவனம் தேவை. வியாபாரத்தில் ஓரளவு லாபம் வரும். பணிகளை போராடி முடிப்பீர்கள். வெல்லும் நாள்.

**சிம்மம்**
எதிர்பார்ப்புகள் நிறைவேறும். பெற்றோர்கள் பக்கபலமாக இருப்பார்கள். திடீர் சந்திப்பு நிகழும். வியாபாரத்தில் வாடிக்கையாளர்கள் தேடி வருவார்கள். முக்கியத்துவம் தருவார்கள். லாபம் பெருகும்.

**கன்னி**
அனுபவ பூர்வமாகவும், அறிவுப்பூர்வமாகவும் பேசி எல்லோரையும் கவர்வீர்கள். வியாபாரத்தில் வேலையாட்களை தட்டிக் கொடுத்துவேலை வாங்குவீர்கள். மரியாதைக் கூடும்.சாதிக்கும் நாள்.

**துலாம்**
கடந்த இரண்டு நாட்களாக கணவன்-மனைவிக்குள் இருந்த மனப்போர் நீங்கும். வியாபாரத்தில் போட்டிகள் குறையும். உங்களை மதித்துப் பேசுவார்கள். புதிய மாற்றம் ஏற்படும் நாள்.

**விருட்சிகம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் மற்றவர்களை நம்பி முக்கிய முடிவுகளை எடுக்க வேண்டாம். உடல் நலம் பாதிக்கும். மேலதிகாரி குறை கூறுவார். விழிப்புடன் செயல்பட வேண்டிய நாள்.

**தனுசு**
உங்கள் பலம், பலவீனத்தை உணர்வீர்கள். மனைவி வழியில் நல்ல செய்தி உண்டு. வியாபாரத்தில் விஐபிகள் வாடிக்கையாளர் ஆவார்கள். சலுகைகள் கிடைக்கும். மகிழ்ச்சியான நாள்.

**மகரம்**
குடும்பத்தில் உங்கள் வார்த்தைக்கு மதிப்பு கூடும். அதிகாரப் பதவியில் இருப்பவர்கள் அறிமுகமாவார்கள். உத்தியோகத்தில் பெரிய பொறுப்புகள் தேடி வரும். சாதிக்கும் நாள்.

**கும்பம்**
பிள்ளைகளின் உயர்கல்வி, உத்யோகம் குறித்து யோசிப்பீர்கள். வியாபாரத்தில் புதிய வாடிக்கையாளர்களை கவர சலுகைகளை அறிவிப்பீர்கள். சக ஊழியர்கள் ஒத்துழைப்பார்கள். கனவு நனவாகும்.

**மீனம்**
எதிர்பார்த்தவைகளில் சில தள்ளிப் போனாலும் எதிர்பாராத ஒரு வேலை முடியும். வியாபாரத்தில் அதிரடி சலுகைகள் மூலம் லாபமடைவீர்கள். உரிமைகள் கிடைக்கும். தேவைகள் பூர்த்தியாகும்.

# விஜயகாந்த் மறைவுக்கு தலைவர்கள் இரங்கல்!



**சென்னை, டிசெ. 29**

**தேசிய முற்போக்கு திராவிடர் கழகத்தின் (தே. மு. தி. க.) தலைவர் விஜயகாந்த் மறைவுக்கு பிரதமர் மோடி, முதல்வர் ஸ்டாலின் உள்ளிட்ட தலைவர்கள் இரங்கல் தெரிவித்துள்ளனர்.**

**பிரதமர் மோடி**

விஜயகாந்த் மறைவு மிகுந்த வருத்தம் அளிக்கிறது. தமிழ் திரையுலகின் சாதனையாளர், தனது திறமையான நடிப்பு மூலம் இலட்சக்கணக்கானவர்களின் மனங்களை கவர்ந்தார். அரசியல் தலைவராக தமிழகத்தின் அரசியல் களத்தில் நீடித்த தாக்கத்தை ஏற்படுத்திய அவர், பொது சேவையில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டு இருந்தார். அவரது மறைவு ஒரு வெற்றிடத்தை ஏற்படுத்துகிறது. அதனை நிரப்புவது கடினம். அவர் நெருங்கிய நண்பராக இருந்தார். பல ஆண்டுகளாக அவருடனான எனது தொடர்புகளை நான் அன்புடன் நினைவுகூர்கிறேன். இந்த சோகமான நேரத்தில், எனது எண்ணங்கள் அவரின் குடும்பத்தினர், ரசிகர்களுடன் உள்ளன. ஓம் சாந்தி.

**மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா**

திரைப்படங்கள் மூலம் தேசபக்தியை ஊட்டியவர் விஜயகாந்த். அவரின் மறைவு குறித்து அறிந்து மிகுந்த வருத்தம் அடைந்தேன். அவரது குடும்பத்தினருக்கும், தொண்டர்களுக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்கள். ஓம் சாந்தி சாந்தி.

**மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன்**

விஜயகாந்த் மறைவுக்கு எனது ஆழ்ந்த இரங்கல்கள். அவரை இழந்துவாடும், அவரது ரசிகர்களுக்கும், தேமுதிக தொண்டர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறேன். 'பசிப்பிணி தீர்த்த பொன்மன வள்ளல்' என்று அஞ்சலி செலுத்துவோம்.

**மத்திய அமைச்சர் எல்.முருகன்**

தே. மு. தி. க. கட்சி நிறுவனத் தலைவர் விஜயகாந்த் உடல் நலக்குறைவு காரணமாக காலமானார் என்ற செய்தி மிகுந்த மனவேதனை அளிக்கிறது. பொதுவாழ்விலும், கலைத்துறையிலும் செயற்கரிய பல செயல்கள் செய்துள்ளவர், தமிழக மக்கள் அனைவராலும் அன்போடு 'கேப்டன்' என்று அழைக்கப்பட்டவர்.

அவரை இழந்துவாடும், குடும்பத்தினர், தே. மு. தி. க. தொண்டர்களுக்கும் மற்றும் அவரது ரசிகர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் வருத்தங்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவி**

சிறந்த நடிகரும் அர்ப்பணிப்புமிக்க தலைவரும் விஜயகாந்த் மறைவு ஆழ்ந்த வேதனை அளிக்கிறது. சினிமா, அரசியல், சமூக சேவை ஆகியவற்றில் அவர் வழங்கிய அளப்பரிய பங்களிப்பு என்றும் நினைவுகூரப்படும். எனது பிரார்த்தனைகள் அவரது குடும்பத்தினருடனும் எண்ணற்ற ஆதரவாளர்களுடனும் உள்ளன. ஓம் சாந்தி!

**முதல்வர் ஸ்டாலின்**

தமிழுணர்வும் தாராள மனமும் கொண்ட உன்னத மனிதரான விஜயகாந்த் மறைவு அதிர்ச்சி அளிக்கிறது. நல்ல உள்ளத்துக்கு சொந்தக்காரரான விஜயகாந்த் திரையுலகிலும் பொதுவாழ்விலும் முத்திரைகளைப் பதித்தவர். விஜயகாந்த் மறைவு தமிழகத்துக்கும் திரையுலகிற்கும் பேரிழப்பாகும். விஜயகாந்த் உடனான எனது நட்பு எந்தக் காலத்திலும், எத்தகைய அரசியல் சூழலிலும் மாறவேயில்லை.

**காங்கிரஸ் தலைவர் கார்கே**

ஒரு சிறந்த நடிகராகவும் அரசியல் தலைவராகவும் தமிழக மக்களால் போற்றப்பட்டவர் விஜயகாந்த். அரசியல் அதிகாரத்தில் விஜயகாந்தின் பங்களிப்பு என்றும் நினைவுகூரப்படும். அவரது குடும்பத்தினருக்கு இரங்கல் தெரிவித்து கொள்கிறேன்.

**காங்.,எம்.பி., ராகுல்**

தே. மு. தி. க. நிறுவனர் விஜயகாந்த் மறைவு ஆழ்ந்த வருத்தத்தை ஏற்படுத்தி உள்ளது. சினிமா மற்றும் அரசியலில் அவரின் பங்களிப்பு இலட்சக்கணக்கானவர்களின் மனதில் அழிக்க முடியாத அடையாளத்தை ஏற்படுத்தி உள்ளது. இந்த கடினமான நேரத்தில் அவரின் குடும்பத்துக்கும், ரசிகர்களுக்கும் ஆழ்ந்த இரங்கல் தெரிவித்து கொள்கிறேன்.

**காங்கிரஸ் பொதுச்செயலாளர் பிரியங்கா**

மாபெரும் கலைஞன், மக்கள் நாயகன், பொன் நெஞ்சம் கொண்ட மனிதரான 'கேப்டன்' விஜயகாந்த் என்றென்றும் மரியாதையுடனும், போற்றுதலுடனும் நினைவுகூரப்படுவார். அவரது குடும்பத்தினருக்கும், அவரை நேசித்த மற்றும் நம்பிய அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறேன்.

**தமிழக பா.ஜ., தலைவர் அண்ணாமலை**

ஏழை எளிய தொழிலாளர்களின் பசிப்பிணி போக்கிய மாமனிதர். உலகெங்கும் வாழும் தமிழ் மக்களின் பேரன்பைப் பெற்ற அற்புதமான கலைஞர். தன்னலமற்ற தலைவர். தமிழ் மக்கள் நலன் ஒன்றையே நோக்கமாகக் கொண்டவர். கொடுத்துச் சிவந்த கரங்களுக்குச் சொந்தக்காரர். சொல்லொன்று செயலொன்று என்றில்லாது, சொன்ன சொல் வழி நின்றவர். பாசாங்கில்லாத மனிதர். பிரதமரின் பேரன்பை பெற்றவர். விஜயகாந்த் மறைவு, தமிழகத்துக்கும், தமிழ் மக்களுக்கும் பேரிழப்பு. அவரது இன்னுயிர் நம்மை விட்டுப் பிரிந்தாலும், அவரது புகழ் என்றும் அவர் பெயரை நிலைத்திருக்கச் செய்யும்.

அ. தி. மு. க. பொதுச்செயலாளர் இ.பி.எஸ்., விஜயகாந்த் காலமானார் என்ற செய்தியறிந்து மிகுந்த மன வேதனை அடைந்தேன். அவரை இழந்துவாடும் மனைவி, குடும்பத்தினர் மற்றும் அவரது தொண்டர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறேன். பொதுவாழ்விலும், கலைத்துறையிலும் செயற்கரிய பல செயல்கள் செய்துள்ள, மக்களால் அன்போடு கேப்டன் என்று அழைக்கப்படும் விஜயகாந்த் ஆன்மா இறைவன் திருவடி நிழலில் இளைப்பாற பிரார்த்திக்கிறேன்.

**டி.டி.வி. தினகரன்**

திரையுலகம் மட்டுமல்லாது தமிழக அரசியல் வரலாற்றிலும் தனக்கென தனி அடையாளத்தை பதித்த தேமுதிக தலைவர் விஜயகாந்த் உடல்நலக்குறைவு காரணமாக உயிரிழந்த செய்தி மிகுந்த வேதனையை ஏற்படுத்துகிறது. தமிழ் மீதும் தமிழக மக்கள் மீதும் அதீத பற்று கொண்டிருந்த விஜயகாந்தை இழந்துவாடும் குடும்பத்தினர், திரையுலகத்தினர், ரசிகர்கள் மற்றும் தே. மு. தி. க. தொண்டர்கள் அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**த.மா.கா தலைவர் வாசன்**

நல்ல தலைவனையும், நல்ல கலைஞரையும் தமிழகம் இழந்துள்ளது. இந்த இழப்பை ஈடு செய்ய முடியாது. அவரை இழந்து வாடும் அவரது மனைவிக்கும், தொண்டர்களுக்கு ஆறுதல் தெரிவித்து கொள்கிறேன்.

**நாம் தமிழர் ஒருங்கிணைப்பாளர் சீமான்**

தான் நடிக்கும் படப்பிடிப்புதளமானாலும், தமது அலுவலகமானாலும் பசியோடு யாரும் இருந்திடக்கூடாது என்று தம்மை நாடி வந்த மக்கள் அனைவருக்கும் பசியாற உணவளித்த மனிதநேயவாதி.

தமிழ்த்திரைத்துறையிலும், அரசியல் துறையிலும் அவர் படைத்த சாதனைகள் காலத்தால் அழியாதவை. அவரை இழந்து வாடும் குடும்பத்தினருக்கும், உறவினர்களுக்கும் திரைத்துறை நண்பர்களுக்கும், தே. மு. தி. க. தொண்டர்களுக்கும், உலகெங்கும் வாழும் அவருடைய இலட்சக்கணக்கான ரசிகர்களுக்கும் எனது ஆறுதலைத் தெரிவித்து கொள்கிறேன்.

**சமத்துவ மக்கள் கட்சி தலைவர் சரத்குமார்**

விஜயகாந்த் மறைவு செய்தி மீளாத்துயரில் ஆழ்த்திவிட்டது. என்றாவது ஒருநாள் குணமடைந்து கேப்டன், மீண்டும் சுறுசுறுப்புடன் இயங்குவார் என எதிர்பார்த்தேன்.

**வி. சி. க. தலைவர்**

விஜயகாந்த் மறைவு தமிழ் சினிமாவுக்கும் தமிழக அரசியலுக்கும் பேரிழப்பு. விஜயகாந்தின் குடும்பத்தினர் கட்சி தொண்டர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் ஆழ்ந்த இரங்கல்.

**ராமதாஸ்**

தமிழ்த்திரையுலகிலும், அரசியலிலும் தமக்கென தவிர்க்க முடியாத இடத்தை வென்றெடுத்தவர் விஜயகாந்த். மிகுந்த இரக்க குணமும், மனிதநேயமும் கொண்டவர். அவரது மறைவு, ஈடு செய்ய முடியாத இழப்பு.

(ஐ)

# பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் ஜனவரி மாதம் சமர்ப்பிக்கப்படும்

## நீதி அமைச்சர் விஜயதாஸ கூறுகிறார்



அச்சட்டமூலத்தில் அவசிய மான திருத்தங்கள் மேற்கொள் ளப்பட்டுள்ளது என்றும் அதற்கு எதிராக உயர் நீதிமன்றத்தை நாடலாம் எனவும் அவர் குறிப் பிட்டார்.

பயங்கரவாதத் தடைச் சட் டத்துக்கு மாற்றீடாக அமைச் சர் விஜயதாஸ ராஜபக்ஷவினால்

கொழும்பு, டிசெ. 29

**பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தை எதிர்வரும் ஜன வரி மாதம் பாராளுமன்றில் சமர்ப்பிப்பதாக நீதி அமைச் சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்தார்.**

முன்மொழியப்பட்ட பயங்கர வாத எதிர்ப்புச்சட்டமூலம் கடந்த மார்ச் மாதம் 22 ஆம் திகதி வர்த்தமானியில் வெளி யிடப்பட்டது.

இருப்பினும் இதற்கு பல எதிர்ப்புக்கள் வெளியானதை அடுத்து திருத்த முன்மொழிவு கள் கோரப்பட்டு ஒக்ரோபர் மாதம் 3 ஆம் திகதி பாராளு மன்றில் சமர்ப்பிக்க தீர்மானிக் கப்பட்டது.

எவ்வாறாயினும் அன்றைய தினம் இணையப் பாதுகாப்பு சட்டமூலம் மட்டுமே சமர்ப் பிக்கப்பட்டது. எனவே இந்த திருத்தங்கள் அடங்கிய பயங் கரவாத எதிர்ப்புச் சட்டமூ லத்தை ஜனவரியில் சமர்ப்பிப் பதாக விஜயதாஸ கூறினார்.(அ)

# இலங்கையில் குடும்பங்களின் வருமானம் கடுமையாக வீழ்ச்சி!




கொழும்பு, டிசெ. 29

நாட்டில் நிலவும் பொருளா தார நெருக்கடியின் காரண மாக, 60 சதவீதத்துக்கும் அதிக மான குடும்பங்களின் மாத வரு மானம் வீழ்ச்சி கண்டுள்ளதாக தொகைமதிப்பு மற்றும் புள்ளி விவரத் திணைக்களம் தெரிவித் துள்ளது.

பொருளாதார நெருக்கடி நிலைமை தொடர்பில் மேற் கொள்ளப்பட்ட புதிய ஆய்வுக ளில் இது உறுதியாகியுள்ளதாக அந்த திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

அந்த ஆய்வின் பிரகாரம் நாட்டில் 60.5 சதவீதமான குடும்பங்களின் வருமானம் வீழ்ச்சி அடைந்துள்ளதாகவும், 91 சதவீதமான குடும்பங்களின் மாதச் செலவுகள் அதிகரித்துள் ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள் ளது.

தொகைமதிப்பு மற்றும் புள் ளிவிவரத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கை யிலேயே இந்த ஆய்வு தொடர் பான விவரங்கள் வெளியிடப் பட்டுள்ளன. (அ)



# கொட்டோடை பிள்ளையார் ஆலயத்தினரால் சாதனையாளர்கள் கௌரவிக்கப்பட்டனர்

வடமராட்சி, டிசெ. 29

யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு, அம்பன் கொட்டோடை பிள்ளையார் ஆலய நிர்வாகத்தி னரால் நேற்று முன்தினம் புதன் சாதனையாளர்கள் கௌரவிப்பு நிகழ்வு நடத்தப்பட்டது.

ஆலயப் பரிபாலன சபை தலைவர் தங்கராசா பார்த்தீபன் தலைமையில் இடம் பெற்ற இந் நிகழ்வில் கொட்டோடை பிள் ளையார் ஆலய பிரதம குரு செந் தூர குருக்கள் பல்கலைக்கழகத் துக்கு தெரிவாகிய சந்திரகுமார் லக்சனா, சிறீதரன் தனுசியா, அழகராசா கபிலன் ஆகியோ ருக்கும், தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் வெட்டுப் புள்ளிகளுக்கு மேல் பெற்று சாதனை படைத்த அம்பன் அமெரிக்கன் தமிழ் கலவன் பாடசாலை மாணவன் சாந்தரு பன் சாருஜன் ஆகியோர் கௌர விக்கப்பட்டனர்.

குறித்த சாதனையாளர்கள் கௌரவிப்பில் ஆலய பிரதம குரு சரந்தூரக்குருக்கள் அவர்க ளுடன் கிராமத்தின் மூத்த பிர ஜைகளான க.தில்லையம்பலம், செ.நவரத்தினம், வி.அருந்தவ ராசா, கா.சுரேந்திரராசா மற்றும் கொட்டோடை அண்ணாமார் ஆலய அர்ச்சகர் க.பத்தமநாதன் ஆகியோரும் இணைந்திருந்த னர்.

இந்நிகழ்வுகளில் கொட் டோடை பிள்ளையார் ஆலய பக்த அடியார்கள் பலரும் கலந்து சிறப்பித்தனர். (அ-2)

# நடிகர் விஜயகாந்தின் மறைவு தமிழக மக்களுக்கு பேரிழப்பு!

## செந்தில் தொண்டமான் இரங்கல்

கொழும்பு, டிசெ. 29

“உடல் நலக்குறைவால் மருத் துவமனையில் சிகிச்சை பெற்று வந்த தேமுதிக தலைவர் ‘கேப் டன் விஜயகாந்த்’ உயிரிழந்த செய்தியறிந்து மிகவும் மனவே தனை அடைந்தேன்” என கிழக்கு மாகாண ஆளுனரும், இலங்கை தொழிலாளர் காங்கிரசின் தலை வருமான செந்தில் தொண்ட மான் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளி யிட்டுள்ள இரங்கல் செய்தியில்-

விஜயகாந்த் மக்களுக்காக தன்னை முழுமையாக அர்ப்ப ணித்த மனிதர். விஜயகாந்து டன் பல முறை ஏற்பட்ட சந்திப் பின் போது அவருடைய எண் ணங்களிலும் செயல்களின் ஊடாகவும் அவர் ஒரு போற் றப்படக் வேண்டிய தலைவர் என்பதை தான் அறிந்தேன்.

எவருக்கும் அஞ்சாது மக்க ளுக்காக உடனுக்குடன் சேவையை செய்யும் அரசியல் தலைவன். மேலும் இலங்கை மக்கள் மீது அதீத அன்பு கொண்ட இவர். இலங்கையில் உள்ள பாமர மக்களுக்காக விளம்பரமற்ற பல உதவிகளை செய்துள்ளார்.

இவர் பாமர மக்களுக்கு விருந்தோம்பல் செய்வதில் ஈடு இணையற்றவர். இவருடைய இழப்பு தமிழக மக்களுக்கும் ஓர் பேரிழப்பாகும்.

நடிகர் விஜயகாந்த் அவர் களை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும், நண்பர்க ளுக்கும், ரசிகர்களுக்கும், தொண் டர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும்,ஆறுதலையும் தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரின் ஆன்மா சாந்திய டைய எல்லாம் வல்ல இறை வனை பிரார்த்திக்கின்றேன்- என்றுள்ளது. (அ)

# யாழ்ப்பாணத்தில் மது அருந்திவிட்டு வாகனம் செலுத்துவோரை குறி வைக்கும் பொலிஸார்!

யாழ்ப்பானம், டிசெ. 29

யாழில் மதுபோதையில் வாகனம் செலுத்துவோரைக் கைது செய்யும் நடவடிக்கை யில் பொலிஸார் தீவிரமாக ஈடுபட்டு வருவதாகத் தெரிவிக் கப்பட்டுள்ளது.

பண்டிகைக் காலத்தில் வாகன விபத்துக்களைத் தடுக்கும் வகை யிலேயே குறித்த நடவடிக்கை இடம்பெற்று வருவதாகவும், இதன்போது மதுபோதையில் வாகனம் செலுத்துபவர்கள் மாத்திரமன்றி வீதி ஒழுங்குகளை மீறுபவர்கள் மீதும் சட்ட நடவ டிக்கை எடுக்கப்படுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

24 மணிநேரமும் குறித்த சோதனை நடவடிக்கை இடம் பெறும் எனவும் இதற்கு பொது மக்கள் ஒத்துழைப்பினை வழங்க வேண்டும் எனவும் பொலிஸார் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ)

# இரு ஆண்களின் சடலங்கள் மீட்பு!

கொழும்பு, டிசெ. 29

எரகம பொலிஸ் பிரிவுக்குட் பட்ட நியூகுண விகாரைக்கு அருகே உள்ள ஏரிக்கு அருகில் நேற்று சடலம் ஒன்று கண்டெ டுக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவரின் அடையா ளம் இதுவரை கண்டறியப்பட வில்லை எனவும், ஆனால் அவர் 45-50 வயது மதிக்கத்தக்க, 5 அடி 5 அங்குலம் உயரம் கொண் டவர் எனவும் பொலிஸார் கூறி னர்.

இதேவேளை, ரம்புக்கனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட திஸ்மல்பொல ரயில் கடவைக்கு அருகில் உள்ள மா ஓயாவில் இனந்தெரியாத ஆண் ஒருவரின் சடலம் கண்டெடுக்கப்பட் டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

கிடைத்த தகவலின் அடிப்ப டையில் ரம்புக்கனை பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள் ளனர். (அ)

# எரிபொருள் பாவனை குறைவு

கொழும்பு, டிசெ. 29

கடந்த ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில், இந்த ஆண்டு எரிபொருள் பாவனை கணிச மாகக் குறைந்துள்ளதாக தெரி விக்கப்படுகின்றது.

இது குறித்து எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர் சங்கத்தின் தலைவர் ஷெல்டன் பெர்னாண்டோ கூறுகையில்-

எரிபொருளுக்கான நுகர் வோர் தேவை சுமார் 50 சதவீ தத்தால் குறைந்துள்ளதால் எரி பொருள் நிரப்பு நிலைய உரிமை யாளர்கள் கடும் நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளனர்.விலைவாசி உயர்வால் மக்களின் வாகனப் பாவனையும் குறைந்துள்ளது. பலர் பொதுப் போக்குவரத்தை பயன்படுத்துகின்றனர். முச்சக் கர வண்டிகள், மோட்டார் சைக்கிள்களை ஓரளவே பயன்ப டுத்துகின்றனர்-என்றார். (அ)

# 8 மில்லியன் முட்டைகள் நாட்டுக்கு இறக்குமதி

கொழும்பு, டிசெ. 29

கடந்த சில மாதங்களாக நாட்டின் பல்வேறு பகுதிகளி லும் முட்டையின் விலை 60-70 ரூபா வரையில் விற்பனையாகி வருவதாக பொதுமக்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

இந்நிலையில் பண்டிகைக் காலத்தினை முன்னிட்டு இந்தி யாவிலிருந்து முட்டைகளை இறக்குமதி செய்து சதொச விற்பனை நிலையங்கள் மூல மாக குறைந்த விலையில் விற் பனை செய்யப்பட்டு வருகின் றன.

இதனால் பண்டிகைக்காலத் தில் மக்கள் தட்டுப்பாடின்றி முட்டைகளை பெற்றுக்கொள் ளக்கூடியதாக காணப்பட்டது.



இவ்வாறானதொரு நிலை யில், மேலும் 8 மில்லியன் இறக் குமதி செய்யப்பட்ட முட்டை களை சதொச விற்பனை நிலை யங்களுக்கு வழங்கும் நடவ டிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ள தாக அரச வணிக இதர சட்ட பூர்வ கூட்டுத்தாபனம் தெரிவித் துள்ளது.

இந்நிலையில் சதொச விற்பனை நிலையங்கள் ஊடாக நேற்று முதல் முட்டைகளை பெற்றுக்கொள்ள முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# யாழில் தொடரும் இணைய மோசடி

## மேலும் இருவர் பல இலட்ச ரூபாவை இழந்தனர்

யாழ்ப்பாணம், டிசெ. 29

**இணைய மோசடியில் சிக்கி யாழில் மேலும் இருவர் 26 இலட்ச ரூபாய் பணத்தினை இழந்துள்ளதாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.**

இணையம் ஊடாக அதிக பணம் ஈட்ட முடியும் என ஆசை வார்த்தைகளுடனான விளம்பரங்களை சமூக வலைத் தளங்கள் ஊடாக மோசடிக்கா ரர்கள் செய்கின்றனர்.

அதனை நம்பி அந்த இணைப் பின் ஊடாக உட்செல்வோர் பணத்தை இழந்து வருகின்றனர்.

குறித்த மோசடியினால் கடந்த வாரம் யாழ்ப்பாணம் மற்றும் கோப்பாய் பொலிஸ் பிரிவை சேர்ந்த இருவர் 30 இலட்சம் மற்றும் 16 இலட்ச ரூபாவை இழந்த நிலையில் பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடு செய்துள்ளனர்.

இந்நிலையில், நேற்று முன் தினம் புதன்கிழமை ஒருவர் 20 இலட்ச ரூபாயை இழந்துள்ள தாகவும், மற்றையவர் 06 இலட்ச ரூபாயை இழந்துள்ளதாகவும் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

இவ்வாறான இணைய மோச டியாளர்களிடம் சிக்காது மக் கள் தான் விழிப்புடன் இருக்க வேண்டும் என பொலிஸார் அறிவித்து வருகின்றமை குறிப் பிடத்தக்கது. (அ)

# 9 மாவட்டங்களில் தட்டம்மை பரவல்



கொழும்பு, டிசெ. 29

9 மாவட்டங்களில் தட் டம்மை நோயாளர்களின் எண் ணிக்கை அதிகரித்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித் துள்ளது.

6 முதல் 9 மாதங்களுக்கு இடைப்பட்ட குழந்தைகளுக்கு தட்டம்மை தடுப்பூசி ஏற்றும் வேலைத்திட்டம் தொடர்பில் திட்டமிடப்பட்டுள்ளதாக சுகா தார அமைச்சின் செயலாளர் விசேட வைத்தியர் பாலித மஹிபால தெரிவித்தார்.

தட்டம்மை நோயாளர்கள் அதிகம் பதிவாகும் கொழும்பு, கம்பஹா, களுத்துறை, காலி, மாத்தறை, கண்டி, யாழ்ப்பா ணம், குருநாகல் ஆகிய மாவட் டங்களிலும் கல்முனையிலும் இந்த தடுப்பூசி ஏற்றும் திட்டம் அமுல்படுத்தப்படவுள்ளது.

இத்திட்டம் ஜனவரி 06 ஆம் திகதி காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை நடை பெறவுள்ளது.

2019 ஆம் ஆண்டில் தட் டம்மை நோயை ஒழித்த நாடாக இலங்கையை உலக சுகாதார ஸ்தாபனம் அறிவித்ததும் நினை வுகூரத்தக்கது. (அ)

# மிளகாய்த்தூளில் கலப்படம்

கொழும்பு, டிசெ. 29

மிளகாய்த்தூளுடன், பாண்த் தூள் மற்றும் அரிசித்தூளை கலந்து விற்பனை செய்யும் குழு தொடர்பில் தகவல் வெளியாகி யுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள் ளது.

புறக்கோட்டையில் காணப் படும் சில பல சரக்கு வர்த்தக நிலையங்களில் இவ்வாறான மோசடி இடம்பெற்று வருவ தாக நுகர்வோர் குற்றம் சுமத்து கின்றனர்.

குறித்த மோசடி நடவடிக் கைகளுக்காக புறக்கோட்டை யில் உள்ள மொத்த விற்பனை நிலையங்களில் இருந்து ஒதுக் கப்பட்ட பாண்தூள் மற்றும் அரிசித்தூள் என்பன பயன்ப டுத்தப்பட்டு வருவதாக தெரிய வந்துள்ளது.

இவ் விடயம் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப் பட்டு வருவதாக குறிப்பிடப் பட்டுள்ளது. (அ)

# மக்கள் மீண்டும் ஜனாதிபதியாக ரணிலையே தெரிவு செய்வார்கள்

## சாமர சம்பத் தசநாயக்க தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 29

மக்கள் மீண்டும் ஜனாதிபதி யாக ரணில் விக்கிரமசிங்க வையே தெரிவு செய்வார்கள் என இராஜாங்க அமைச்சர் சாமர சம்பத் தசநாயக்க தெரிவித்தார்.

மன்னாரில் உப்பு உற்பத்தி நிறுவனப் பணியாளர்களுக்கு வருடாந்த ஊக்குவிப்புத் தொகை வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை கூறினார்.

மன்னார் மாந்தை உப்பு உற்பத்தி நிறுவன பணியாளர் கள் மற்றும் தொழிலாளர்க ளுக்கு வருடாந்த ஊக்குவிப்புத் தொகை வழங்கும் நிகழ்வு நேற்று முன் தினம் மன்னார் உப்பு உற் பத்தி நிலையத்தில் இடம்பெற் றது.

மன்னார் உப்பு உற்பத்தி நிலையத்தின் முகாமையாளர் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், ஆரம்ப கைத்




தொழில் இராஜாங்க அமைச்சர் சாமர சம்பத் தசநாயக்க மற் றும் உப்பு உற்பத்தி நிறுவன அதிகாரிகள் பணிப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

இதன் போது குறித்த உப்பு உற்பத்தி நிறுவனத்தில் பணி புரியும் பணியாளர்கள் தொழி லாளர்கள் என 150 பேருக்கு வருடாந்த ஊக்குவிப்புத் தொகை கொடுப்பனவுகள் காசோலை களாக வழங்கப்பட்டன. (அ)

# தீர்வு வழங்கப்படாவிட்டால் தொழிற்சங்க நடவடிக்கை!

## மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை

கொழும்பு, டிசெ. 29

நாட்டை விட்டு மருத்துவர் கள் வெளியேறுகின்றமை உள் ளிட்ட பிரச்னைகளுக்கு தீர்வு வழங்கப்படாவிட்டால் தொழிற் சங்க நடவடிக்கையில் ஈடுபட வுள்ளதாக அரச மருத்துவ அதி காரிகள் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

கொழும்பில் நேற்று முன் தினம் புதன்கிழமை இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்ட அதன் செயலாளர் வைத்தியர் ஹரித அளுத்கே மேலும் தெரிவிக்கையில்-

குறித்த தொழில் சங்க நடவ டிக்கையானது எதிர்வரும் ஜன வரி மாதம் முதலாம் திகதி தொடக்கம் ஆரம்பமாகவுள் ளது. இதற்கு மத்திய குழுவும் ஏகமனதாக அங்கீகாரம் வழங் கியுள்ளது-என்றார். (அ)

# 15 கொள்கலன் இறக்குமதி மருந்துகள் துறைமுகத்தில்

கொழும்பு, டிசெ. 29

இறக்குமதி செய்யப்பட்ட 15 கொள்கலன் மருந்துகள் தற்போது துறைமுகத்தில் சிக்கி யுள்ளதாக சுகாதார அமைச்சின் செயலாளர், வைத்தியர் பாலித மஹிபால தெரிவித்தார்.

தனியார் துறையினர் இறக்கு மதி செய்த மருந்துகளே இவ் வாறு துறைமுகத்தில் சிக்கியுள் ளதாக அவர் குறிப்பிட்டார்.

குறித்த மருந்து நிறுவனங்க ளின் பதிவு உள்ளிட்ட பல சிக் கல்களினால் இவற்றை விடு விக்க முடியாதுள்ளதாக சுகா தார அமைச்சின் செயலாளர் தெரிவித்தார்.

இந்த சிக்கல் நிலை தொடர் பில் ஆராய குழுவொன்று நிய மிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார். (அ)



# பேராதனையில் மண் சரிவு

கொழும்பு, டிசெ. 29

லுணுகல - பிபில வீதிக்கு இடையிலான பேராதனை - செங்கலடி வீதியில் ஏற்பட்ட மண்சரிவு காரணமாக போக்கு வரத்து தடை செய்யப்பட்டுள் ளது.

தொடர்ந்து பெய்து வரும் கடும் மழை காரணமாக இந்த மண்சரிவு இடம்பெற்றுள்ளது.

இந்நிலையில், மக்கள் அனை வரும் பாதுகாப்பான போக்கு வரத்தை கடைபிடிக்குமாறு பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# மூளைக் காய்ச்சல் ஆபத்து இருக்கும் சிறைகளுக்கு நோயெதிர்ப்பு மருந்து!

கொழும்பு, டிசெ. 29

மூளைக் காய்ச்சலுக்கான நோயெதிர்ப்பு மருந்துகளை நாடளாவிய ரீதியில் மூளைக் காய்ச்சல் தொடர்பான ஆபத் தில் உள்ளதாக சந்தேகிக்கப்ப டும் சிறைச்சாலைகளுக்கு வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கான வேலைத்திட்டம் இந்த வாரத்திற்குள் நடைமுறைப் படுத்தப்படும் என சிறைச்சாலை கள் சுகாதார சேவைகள் பணிப் பாளர் மருத்துவர் ஹேமந்த ரணசிங்க தெரிவித்துள்ளார்.

தற்போது மாத்தறை சிறைச் சாலைக்கு கைதிகளை அனுப் பும் செயற்பாடுகள் நிறுத்தப் பட்டு புதிய கைதிகள் அங்குனு கொலபலஸ்ஸ சிறைச்சாலைக்கு அனுப்பப்படுகின்றனர்.

மாத்தறை சிறைச்சாலையின் கைதிகள் மற்றும் அதிகாரிக ளுக்கு இந்த நோயெதிர்ப்பு மருந் துகள் வழங்கப்பட்டுள்ளதாக வும் பணிப்பாளர் குறிப்பிட்டார்.

போதைப் பொருள் பாவ னைக்கு அடிமையானவர்கள் அதிகளவில் இந்த பாதிப்பை எதிர்நோக்குவதாக அவர் கூறி னார்.

மாத்தறை சிறைச்சாலையி லுள்ள நோய்வாய்ப்பட்ட கைதி கள் பலரிடமிருந்து எடுக்கப் பட்ட மாதிரிகளில் ஒரு மாதிரி யில் மூளைக் காய்ச்சல் இருப் பது உறுதி செய்யப்பட்டது.

# பொருளாதார பாதிப்புக்கு ராஜபக்ஷர்களை போல் ரணில் விக்கிரமசிங்கவும் பொறுப்பு கூறவேண்டும்

## சரித ஹேரத் வலியுறுத்தல்

கொழும்பு, டிசெ. 29

**பொருளாதார பாதிப்புக்கு ராஜபக்ஷர்களை போல் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் பொறுப்பு கூறவேண்டும். 2024 ஆம் ஆண்டு இடம்பெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் பொருளாதார பாதிப்புக்கு பொறுப்புக் கூற வேண்டியவர்களுக்கு ஆதரவு வழங்குவதா? அல்லது பொருளாதார மீட்சிக்கான திட்டங்களை முன்வைக்கும் தரப்பினருக்கு ஆதரவு வழங்குவதா என்பதை நாட்டு மக்கள் தீர்மானிக்க வேண்டும் என சுதந்திர மக்கள் சபையின் பொதுச் செயலாளர் பேராசிரியர் சரித ஹேரத் தெரிவித்தார்.**

நாவல பகுதியில் உள்ள சுதந்திர மக்கள் சபை காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

2024 ஆம் ஆண்டு அரசியல் மற்றும் சமூக கட்டமைப்பில் பாரிய மாற்றம் ஏற்படும். பொருளாதார பாதிப்புக்கும் தனக்கும் எவ்வித தொடர்புமில்லை என்ற நிலைப்பாட்டில் இருந்துக் கொண்டு செயற்படுகிறார். பொருளாதார பாதிப்புக்கு ராஜபக்ஷர்களை போல் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் பொறுப்பு கூறவேண்டும்.

முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் வரையறையற்ற வகையில் சர்வதேச பிணைமுறியங்களில் இருந்து பெற்றுக் கொண்ட கடன்களினால் இலங்கையில் அரசமுறை கடன்கள் நெருக்கடிக்குள்ளானது.



நல்லாட்சி அரசாங்கத்தில் நாடு வங்குரோத்து நிலையடைந்திருக்க வேண்டும். வங்குரோத்து நிலையை ரணில் விக்கிரமசிங்க பிற்போட்டார். முன்னாள் ஜனாதிபதி கோட்டபய ராஜபக்ஷ வின் ஆட்சியில் நாடு பாரிய நெருக்கடிகளை எதிர்கொண்டது. முறையான முகாமைத்துவமில்லாததால் வங்குரோத்து நிலைக்கு செல்ல நேரிட்டது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தற்போதைய பொருளாதார பாதிப்பின் ஒரு பங்குதாரர். அடுத்த ஆண்டு இடம்பெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் பொருளாதார பாதிப்புக்கு பொறுப்புக் கூற வேண்டியவர்களுக்கு ஆதரவு வழங்குவதா ? அல்லது பொருளாதார பாதிப்பில் இருந்து மீள்வதற்கான திட்டங்களை முன்வைப்பவர்களுக்கு ஆதரவு வழங்குவதா ? என்பதை நாட்டு மக்கள் தீர்மானிக்க வேண்டும்-என்றார். (அ)

# யாழ். நகரில் தீ விபத்து; 2 கடைகள் எரிந்து நாசம்




யாழ்ப்பாணம், டிசெ. 29

யாழ்ப்பாண நகரப் பகுதியில் உள்ள பெரிய கடை வீதி கட்டடத் தொகுதியில், நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு இரண்டு கடைகள் தீயில் எரிந்துள்ளன.

இதன்போது கடையில் இருந்த பெரும்பாலான பொருட்கள் எரிந்து நாசமாகியுள்ளன.

சம்பவ இடத்துக்கு விரைந்த யாழ் மாநகர சபையின் தீயணைப்பு பிரிவினர் தீப்பரவலை கட்டுப்பாடுக்குள் கொண்டு வந்தனர்.

சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாணம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# வவுனியாவில் வர்த்தக நிலையங்களுக்கு 22 இலட்சம் ரூபா தண்டப் பணம் அறவீடு

வவுனியா, டிசெ. 29

வவுனியாவில் 2023 ஆம் ஆண்டில் வர்த்தக நிலையங்களிற்கு எதிராக 22 இலட்சத்து நாற்பதாயிரத்து ஐந்நூறு ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளதாக நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையின் வவுனியா மாவட்ட பொறுப்பதிகாரி சத்துர வன்னி நாயக்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

வவுனியா மாவட்டத்தில் கடந்த 2023 ஆம் ஆண்டில் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையினரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றி வளைப்புக்கள் மற்றும் சோதனை நடவடிக்கைகளின் போது 771 வியாபார நிலையங்கள், உற்பத்தி நிறுவனங்கள் மற்றும் நிறுவன முகவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டது.

இவ் 771 வழக்குகளும் காலாவதியான பொருட்களை விற்பனை செய்தல் காட்சிப்படுத்துதல், விலை காட்சிப்படுத்தாமல் பொருட்களை விற்பனை செய்தல், கட்டுப்பாட்டு விலையிலும் பார்க்க கூடிய விலையில் பொருட்களை விற்பனை செய்தல், போன்ற பல்வேறு விடயங்களிற்கு எதிராகவே பதிவு செய்யப்பட்டுள்ளன-என்றார்.

இதேவேளை, பாவனையாளர்கள் அதிகார சபையினால் பொதுமக்கள் பாடசாலை மாணவர்கள், பொலிஸார், அரச அலுவலகர்கள் என பல தரப்பினருக்கும் பாவனையாளர் உரிமைகள், பாவனையாளர் கடமைகள், பாவனையாளர் சட்டங்கள் தொடர்பாக விழிப்புணர்வு நிகழ்ச்சிகளும் நடத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# கொவிட் உப வகை வைரஸிலிருந்து பாதுகாப்பு பெறும் வழிகாட்டலை விரைவில் மக்களுக்கு வழங்கவேண்டும்!

## அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் கோரிக்கை

கொழும்பு, டிசெ. 29

கொவிட் 19 வைரஸின் ஜே.என் 1 உப வகை தொடர்பில் பின்பற்ற வேண்டிய வழிகாட்டல்களை விரைவாக பொது மக்களுக்கு விநியோகிப்பதற்கு சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுக்கவேண்டும் என அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் வைத்தியர் ஹரித்த அளுத்கே தெரிவித்தார்.

நாட்டுக்குள் நுழைந்திருப்பதாக தெரிவிக்கப்படும் கொவிட் வைரஸின் புதிய வகை தொடர்பாக சுகாதார துறை மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கை தொடர்பாக குறிப்பிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கொவிட் வைரஸ் தொற்றின் புதிய வகை தொற்றான ஜே.என் 1 நாட்டுக்குள் நுழைந்திருப்பதாக நம்புகிறோம். அதனால் விமான நிலையத்தில் இது தொடர்பாக அறிவுறுத்தும் நடவடிக்கை மற்றும் பரிசோதனை நடவடிக்கையை விரிவுபடுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். அதேநேரம் இந்த வைரஸ் தொற்றில் இருந்து பாதுகாப்பு பெற பின்பற்ற வேண்டிய வழிகாட்டல்களை விரைவாக பொது மக்களுக்கு விநியோகிப்பதற்கு சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அதேபோன்று நீரிழிவு, புற்றுநோய், இருதய நோய் மற்றும் கர்ப்பிணி தாய்மார்கள் உள்ளிட்ட எச்சரிக்கைக்குரிய குழுவினர் தொடர்பாக கவனம் செலுத்த வேண்டும். அத்துடன் இதற்கு முன்னர் செயற்படுத்திய கொவிட் சுகாதார வழிகாட்டல்களை மீண்டும் செயல்வலுப்படுத்துவதற்காக விரைவாக செயற்படுத்துவது சுகாதார அமைச்சின் பொறுப்பாகும்.

அத்துடன் இந்த புதிய கொவிட் பிறழ்வு உப வகை தொடர்பாக அவதானமாக செயற்பட வேண்டிய ஒன்று என உலக சுகாதார அமைப்பு கருத்து தெரிவித்திருக்கிறது. கொவிட் உலக தொற்று நிலைமையில் இருந்து மீண்டாலும் இவ்வாறான அலகு வகைகள் எந்த சந்தர்ப்பத்திலும் வெளிப்படக்கூடும். அதனால் இது தொடர்பாக விசேட கவனம் செலுத்தி. இது தொடர்பாக இருந்துவரும் எச்சரிக்கை தொடர்பாக அறிவிப்பு செய்வது முக்கியமாகும்.

குறிப்பாக எச்சரிக்கையாக இருக்க வேண்டிய குழுவினருக்காவது முகக்கவசம் அணிவது, கைகளை கழுவுவது போன்ற சுகாதார செயற்படுகளை மேற்கொள்ள வேண்டும் என சுகாதார அமைச்சு விரைவாக அறிவுறுத்தவேண்டும்-என்றார். (அ)

# வெள்ள அனர்த்தம் காரணமாக முல்லை விவசாயிகள் பாதிப்பு

முல்லைத்தீவு, டிசெ. 29

வடக்கு-கிழக்கு எங்கிலும் அண்மையில் இடம்பெற்ற வெள்ள அனர்த்தத்தினால் முல்லைத்தீவு மாவட்டம் பாண்டியன்குளம் மற்றும் துணுக்காய் கமநல சேவை நிலையத்திற்குட்பட்ட மாந்தை கிழக்கு மற்றும் துணுக்காய் விவசாயிகளின் விவசாய நிலங்களும் பாதிக்கப்பட்டுள்ளன.

வவுனிக்குள நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழான பாண்டியன் குளம் கமநல சேவை நிலையத்துக்குட்பட்ட பகுதிகளில் விவசாயிகள் வெள்ளத்துக்கு முதல் மடிச்சு கட்டி மற்றும் கபிலநிற தத்தி போன்ற நோய்களின் தாக்கங்கள் அதிகரித்து காணப்பட்டாலும், அவற்றிலிருந்து காப்பாற்றி வயல்நிலங்களை பராமரித்தபோதும் வெள்ளத்தினால் தற்போது அவை அழிவடைந்திருப்பதாகவும், இந்த அரசாங்கம் தமக்கான இழப்பீட்டை தந்துதவினால் மேலும் தாங்கள் விவசாயத்தை மேற்கொள்ள கூடியதாக இருக்கும் எனவும் தெரிவிக்கின்றனர்.

இந்த முறை துணுக்காய் மற்றும் மாந்தை கிழக்கு பகுதிகளில் 14,590 ஏக்கர் நிலப்பரப்பில் விவசாயிகள் வேளாண்மை செய்து வருகின்றனர்.

இதேவேளை, துணுக்காய் கமநல சேவை நிலையத்திற்குட்பட்ட பகுதிகளில் இம்முறை 7,840 ஏக்கர் நிலப்பரப்பில் விவசாயிகள் வேளாண்மை செய்கின்ற அதேவேளை, 2,300 ஏக்கர் வயல் நிலங்கள் வெள்ள நீரில் மூழ்கி காணப்பட்டதுடன் அழிவடைந்தும் இருப்பதாக துணுக்காய் கமநல சேவை நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர் விஜயரத்தினம் வசந்தன் தெரிவித்தார்.

3,800 ஏக்கர் வயல் நிலங்கள்



வெள்ள நீரில் மூழ்கி காணப்பட்டதுடன் அழிவடைந்தும் இருப்பதாக பாண்டியன்குளம் கமநல சேவை நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர் தனபாலசிங்கம் குணாளன் தெரிவித்தார். (அ)

ஈழநாடு



# கொழும்பிலிருந்து திருமலைக்கு ஜனவரியில் புதிய ரயில் சேவை!

கொழும்பு, டிசெ. 29

**கொழும்பு கோட்டையில் இருந்து திருகோணமலை வரை புதிய ரயில் சேவை ஆரம்பிக்கப்பட உள்ளதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.**

வடக்கு ரயில் பாதையில் மஹவ மற்றும் ஓமந்தைக்கு இடையிலான ரயில் பாதையை நவீனமயப்படுத்தும் திட்டத்தின் இரண்டாம் கட்டமாக, மஹவ மற்றும் அனுராதபுரம் இடையிலான ரயில் பாதையின் நவீனமயமாக்கல் பணிகள் ஜனவரி 7 முதல் ஆரம்பிக்கப்படவுள்ளதால், அதில் பயணித்த யாழ்தேவி ரயில், கொழும்பில் இருந்து திருகோணமலைக்கு செல்லும் பாதைக்கு பயன்படுத்தப்பட்டுள்ளது.

இது ஒரு விரைவு ரயிலாகும். 6 மணி நேரத்தில் குறுகிய நேரத்தில் இலக்கை அடைய திட்டமிடப்பட்டுள்ளது.

இது கொழும்பு கோட்டை ரயில் நிலையத்தில் இருந்து காலை 5.45 மணிக்கு பயணித்து திருகோணமலை ரயில் நிலையத்தை முற்பகல் 11.52 க்கு வந்தடையும், அதே ரயில் திருகோணமலை ரயில் நிலையத்தில் இருந்து மதியம் 12.35 மணிக்கு புறப்பட்டு 18.39 மணிக்கு கோட்டை ரயில் நிலையத்தை சென்றடையும்.

(அ)



# கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரி விஞ்ஞானப் பிரிவுக்கு மடிக்கணினி

அம்பாறை, டிசெ. 29

கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரி (தேசிய பாடசாலை) உயர்தர உயிரியியல் பௌதீக விஞ்ஞான பிரிவின் தேவையின் பொருட்டு "பல்கீஸ் யூசுப் ஹமீட் அறக்கட்டளை" நிதி உதவியுடன் கல்லூரியின் முதல்வர் ஏ.பி. நஸ்மியா சனூஸிடம் உத்தியோகபூர்வமாக மடிக் கணினி அன்பளிப்பு செய்து வைக்கப்பட்டது.

உயர்தர உயிரியியல் பௌதீக விஞ்ஞான பிரிவின் செயற்பாட்டை மேம்படுத்தல், தகவல் சேகரித்தல் மற்றும் இலத்திரனியல் முறையில் தகவல் பரிமாற்ற சேவையினை இலகுபடுத்தும் நோக்கில் அதிபர் அவர்களினால் முன்வைக்கப்பட்ட வேண்டுகோளுக்கமைவாகவே குறித்த மடிக் கணினி அன்பளிப்பு செய்யப்பட்டது.

(அ)

# ஒசுசல கிளை திறக்க நடவடிக்கை

அம்பாறை, டிசெ. 29

பொத்துவில் நகரில் அரச மருந்தாக்க கூட்டுத்தாபனத்தின் (அரச ஒசுசல) கிளை திறப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக, அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம்.முஸாரப் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "இப்பிரதேசங்களில் வாழும் மக்கள் அவர்களுக்கு தேவையான மருந்து வகைகளை பெருமளவில் தனியார் மருந்து விற்பனை நிலையங்களிலேயே கொள்வனவு செய்து வருகின்றனர்.

அரச ஒசுசல கிளை ஒன்று இல்லாமையினால் தமக்குத் தேவையான மருந்துகளை பெற்றுக் கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு முகங் கொடுக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதோடு, அவசரத் தேவைகளுக்கு மருந்துகளை பெற்றுக் கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

நோயாளிகள் அரச ஒசுசலவில் மருந்தைக் கொள்வனவு செய்வதற்கு சுமார் 40 கிலோ மீற்றருக்கு அப்பால் உள்ள அக்கரைப்பற்று, நிந்தவூர் ஆகிய பிரதேசங்களுக்குச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் நோயாளர்கள் பல அசௌகரியங்களை எதிர்கொள்வதோடு பொருளாதார ரீதியாக பாதிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

பொத்துவில் நகரில் அரச மருந்தாக்க கூட்டுத்தாபனத்தின் (அரச ஒசுசல) கிளை திறக்கப்படும் பட்சத்தில் லகுகல, பாணம, கோமாரி ஆகிய பிரதேசங்களில் சுமார் 70 ஆயிரத்திற்கு மேற்பட்ட நன்மையடையவுள்ளனர்" என தெரிவித்துள்ளார்.

(அ)

# மாளிகைக்காடு பிரதேசத்தில் பெரு வெள்ளம்

அம்பாறை, டிசெ. 29



சாய்ந்தமருது - மாளிகைக்காடு எல்லைப் பிரதேசத்தில் நேற்று முன்தினம் அதிகாலை முதல் பெய்த பலத்த மழையினால் பிரதான வீதியில் பாரிய வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது.

இதனால் சாய்ந்தமருது பிரதேச வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக வருகை தந்திருந்த நோயாளிகள் பலர் பலத்த சிரமங்களுக்குள்ளானார்கள்.

இதே வேளை தாழ்நிலங்கள் நீரில் மூழ்கியுள்ளதுடன், சில குடும்பங்கள் தங்கள் உறவினர்கள் வீட்டில் தஞ்சமடைந்துள்ளனர்.

வடிகான்களில் மண்களும் திண்மக்கழிவுகளும் அடைத்துள்ளதால் சிறு மழைக்கும் பெரு வெள்ளம் ஏற்படக்கூடிய நிலமை ஏற்பட்டுள்ளது.

(அ)

# நெல்மூட்டைகள், பசளை களஞ்சியசாலை உடைப்பு

## சம்மாந்துறை பொலிஸார் விசாரணை

அம்பாறை, டிசெ. 29

களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டிருந்த 10 நெல் மூட்டைகள் 2 பசளைகள் கதவு உடைக்கப்பட்டு திருடப்பட்டுள்ள சம்பவம் தொடர்பில் சம்மாந்துறை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை இச்சம்பவம் சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உடங்கா 2 கிராம சேவையாளர் பிரிவில் இடம்பெற்றுள்ளது.

இதற்கமைய கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டிற்கமைய சம்மாந்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கே.டி.எஸ் ஜெயலத் தலைமையில் பெருங்குற்றப்பிரிவு பொறுப்பதிகாரி உப பொலிஸ் பரிசோதகர் கே. சதீஸ்கர் தலைமையிலான பொலிஸ் குழு புலன்விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

அத்துடன் சம்பவ இடத்திற்கு தடயவியல் பொலிஸார் வரவழைக்கப்பட்டு மேலதிக விசாரணைகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது.

(அ)



# மாஞ்சோலை வரலாற்றில் முதன்முறை முப்பெரும் விழா

அம்பாறை, டிசெ. 29

மாஞ்சோலை ஹிழ்ரிய்யா ஜூம்ஆப்பள்ளிவாசலுடன் இணைந்து பதுரியா -மாஞ்சோலை ஹிழ்ரிய்யா கல்வி அபிவிருத்திச்சங்கம் இணைந்து நடத்திய மாணவர்களைக் கௌரவிக்கும் முப்பெரும் விழா இடம்பெற்றது.

பதுரியா -மாஞ்சோலை ஹிழ்ரிய்யா கல்வி அபிவிருத்திச் சங்கத்தின் தலைவர் எம்.முஸம்மில் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், கோறளைப்பற்று மேற்கு, ஓட்டமாவடி கோட்டக் கல்வி அதிகாரியும் பிரதிக்கல்விப் பணிப்பாளருமான வீ.ரீ. அஜ்மீர் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.



இம்முப்பெரும் கௌரவிப்பு விழாவில் தரம் - 05 புலமைப்பரிசில் பரீட்சையில் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்று சித்தியடைந்த மாணவர்கள், வெட்டுப் புள்ளிகளுக்கு மேல் பெற்று சித்தியடைந்த மாணவர்கள், க.பொ.த சாதாரண தரப்பரீட்சைகளில் சித்தியடைந்த மாணவர்கள், பல்கலைக்கழகம் மற்றும் உயர்கல்வி நிறுவனங்களில் கல்வி பயிலும் மாணவர்கள் நினைவுச்சின்னங்களும் சான்றிதழ்களும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டதோடு, மீராவோடை அல் ஹிதாயா மகா வித்தியாலயம், பதுரியா நகர் அல் மினா வித்தியாலயம் மற்றும் மாஞ்சோலை அல் ஹிறா வித்தியாலய அதிபர்களுக்கும் அதே பாடசாலைகளில் தரம் 5 புலமைப்பரிசில் மாணவர்களுக்கு அர்ப்பணிப்புடன் கல்வி கற்பித்த ஆசிரியர்களுக்கு நினைவுச்சின்னங்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

(அ)

# சுழல் காற்றால் வீடுகள் சேதம்

திருமலை, டிசெ. 29

தம்பலகாமம் பிரதேச செயலகப் பகுதியில் நேற்று முன் தினம் புதன்கிழமை வீசிய சுழல் காற்று காரணமாக தம்பலகமம் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பாலம்போட்டாறு கிராமசேவகர் பிரிவின் பத்தினிபுரம், இக்பால் நகர் முதலான பகுதிகளில் சுமார் ஐந்துக்கு மேற்பட்ட வீடுகளுக்கும், கடை ஒன்றுக்கும் சேதம் ஏற்பட்டுள்ளதுடன், சிலருக்கு காயங்களும் ஏற்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.



மேலும் வீடுகளின் கூரைகள் மற்றும் பலன் தரும் மரங்களும் சேதமடைந்துள்ளதாகத் தெரியவந்துள்ளதுடன், குடியிருப்பு பகுதிகள் சேதமடைந்துள்ளதால் அடுத்த மழை பெய்தால் எங்கே செல்வது எனவும் இது தொடர்பில் உரிய அதிகாரிகள் தங்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்து தருமாறும் பதிக்கப்பட்ட மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(அ)

ஈழநாடு



# பிரித்தானியாவில் வீடற்றோரின் எண்ணிக்கை 40 வீதம் அதிகரிப்பு

## நெருக்கடியை தீர்ப்பதற்கு 50 ஆண்டுகள் தேவை

**லண்டன், டிசெ. 29**

**பிரித்தானியாவின் கிராமப்புறங்களில் வீடற்றவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக தெரியவந்துள்ளது.**



கடந்த 5 வருடங்களில் இவ்வாறானதொரு அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக கண்டறியப்பட்டுள்ளது.

வாழ்க்கைச்செலவு நெருக்கடி மற்றும் அதிகரித்துள்ள சொத்து விலை ஆகியவற்றின் காரணமாக பிரித்தானியா கடுமையான பாதிப்புகளை எதிர்கொண்டுள்ளது.

இந்த நிலையில், பிரித்தானியாவின் கிராமப்புறங்களில் வீடற்றவர்களின் எண்ணிக்கை கடந்த ஐந்து வருடங்களில் 40 வீதம் அதிகரித்துள்ளதாக தொண்டு நிறுவனமொன்று தெரிவித்துள்ளது.

இதற்கமைய, கிராமப்புறங்களில் வீடற்றவர்களின் எண்ணிக்கை கடந்த 2018 ஆம் ஆண்டில் 17,212 ஆக இருந்த நிலையில் 2023 ஆம் ஆண்டில் 24,143 ஆக அதிகரித்துள்ளது என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இலண்டன், நோர்விச் உள்ளிட்ட பல்வேறு நகரங்களிலும் இந்த பிரச்னை மிகவும் கடுமையாக காணப்படுவதாக கண்டறியப்பட்டுள்ளது.

பிரித்தானியா முழுவதும் சராசரியாக 100,000 பேருக்கு 15 பேர் வீடற்றவர்களாக பதிவு செய்யப்பட்டுள்ளனர்.

இதனிடையே, பொஸ்ரன் முழுவதும் உலா நகரங்களில் 100,000 பேருக்கு 38 பேர் வீடற்றவர்கள் எனவும், லண்டனில் 100,000 பேருக்கு 23 பேர் வீடற்றவர்கள் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த நபர்கள் திறந்தவெளி, கூடாரங்கள், தற்காலிக தங்குமிடங்கள் அல்லது மனிதர்கள் வசிப்பதற்கு பொருத்தமற்ற கட்டடங்களில் வாழ்ந்துவருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், பிரித்தானியாவின் கிராமப்புறங்களில் 300,000 பேர் வீட்டு வசதிக்காக காத்திருப்பதாக குறித்த தொண்டு நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், ஆண்டுக்கு 300,000 புதிய வீடுகளைக் கட்டும் அரசாங்கத்தின் நோக்கத்தின் அடிப்படையில், குடியிருப்பு நெருக்கடியைத் தீர்ப்பதற்கு 50 ஆண்டுகள் ஆகும் என்று கணிப்பிடப்பட்டுள்ளது.



# சுதந்திரம் பற்றி பேசுவதை தாய்வான் நிறுத்த வேண்டும்

## சீனா எச்சரிக்கை

பீஜிங், டிசெ. 29

தாய்வானின் ஆளும் கட்சி அந்நாட்டின் சுதந்திரம் குறித்து பேசுவதை நிறுத்தாவிட்டால் அந்நாட்டுக்கு எதிராக மேலதிகமான பொருளாதார தடைகள் விதிக்கப்படும் என சீனா நேற்று எச்சரிக்கை விடுத்துள்ளது.

எதிர்வரும் ஜனவரி மாதம் தாய்வானில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ளது.

தேர்தலுக்கு முன்னதாக சீனாவுக்கும் தாய்வானுக்கும் இடையில் கடும் கருத்து மோதல்கள் ஏற்பட்டுள்ளன.

சீனா, தாய்வானை தனது நாட்டின் ஒரு பகுதியாக கருதி செயற்பட்டு வருகிறது.

தாய்வானில் இருந்து இறக்குமதி செய்யப்படும் இரசாயனங்களுக்கான வரி குறைக்கப்படமாட்டாது என சீனா அண்மையில் அறிவித்திருந்தது.

இதனையடுத்து சீனா தமது நாட்டுக்கு பொருளாதார ரீதியாக அழுத்தங்களை கொடுப்பதாகவும் தமது நாட்டின் தேர்தலில் தலையிடுவதாகவும் தாய்வான் குற்றம் சுமத்தியுள்ளது.

(அ)



# சூடானில் அதிகரிக்கும் பதற்றம்!

## 253 குழந்தைகளைக் காப்பாற்றிய யுனிசெவ்

கார்ட்டூம், டிசெ. 29

சூடானின் அல் ஜசிரா மாநிலத்தில் இடம்பெற்றுவரும் உள்நாட்டு யுத்தமானது நாளுக்கு நாள் தீவிரமடைந்து வருகின்றது.

இந்நிலையில் யுத்தம் இடம்பெற்றுவரும் இடங்களில் இருந்து 253 சிறுவர்களை மீட்டுள்ள யுனிசெப் அமைப்பானது அவர்ளை பாதுகாப்பான இடமொன்றில் தங்கவைத்து பராமரித்து வருவதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

அத்துடன் சூடானில் உள்ள குழந்தைகளுக்கு அமைதி தேவை எனவும் யுனிசெப்ஃ அமைப்பு வலியுறுத்தியுள்ளது.

அண்மையில் சுமார் 3 மில்லியன் சிறுவர்கள் சூடானில் ஆபத்தில் இருப்பதாக ஐ.நா தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# அவுஸ்திரேலியாவில் சீரற்ற வானிலை: சிறுமி உள்ளிட்ட 10 பேர் உயிரிழந்தனர்

கான்பரா, டிசெ. 29

அவுஸ்திரேலியாவின் கிழக்குப் பகுதியில் கிறிஸ்மஸ் பண்டிகை தினத்தன்று பெய்த கடுமையான இடியுடன் கூடிய மழை காரணமாக ஒன்பது வயது சிறுமி உள்ளிட்ட 10 பேர் உயிரிழந்துள்ளனர்.

அத்துடன், பல்லாயிரக்கணக்கான மக்கள் இதுவரை மின்சாரம் இன்றி சிரமத்திற்குள்ளாகி உள்ளனர்.

இதன்படி, அவுஸ்திரேலியாவின் விக்டோரியா மற்றும் நியூ சவுத் வேல்ஸ் ஆகிய நகரங்களும் வெள்ளம் மற்றும் பலத்த காற்றினால் பாதிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நிலையில், தொடர்ந்தும் இடியுடன் கூடிய மழை பெய்யுமென முன்னெச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.



இருப்பினும், நிலைமை சீராகுமென எதிர்பார்க்கப்படுவதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இதனிடையே, அவுஸ்திரேலியாவின் பல்வேறு இடங்களில் வீசிய காற்று காரணமாக கட்டிடங்களின் கூரைகள் அள்ளுண்டு சென்றுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

# பழக்கடைக்காரருக்கு வாடிக்கையாளர் கொடுத்த ரூ 3.80 கோடி மதிப்புள்ள வீடு!

பீஜிங், டிசெ. 29

பழக்கடைக்காரருக்கு அவரது வாடிக்கையாளர்களில் ஒருவர் ரூபாய் 3.80 கோடி மதிப்புள்ள வீட்டை பரிசாக கொடுத்துள்ள சம்பவம் வியப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்த சம்பவம் சீனாவின் ஷாங்காய் நகரில் நடந்துள்ளது.

அந்த வாடிக்கையாளருக்கு 3 சகோதரிகள் உள்ளனர்.

இருப்பினும் அவர் யாருக்கும் சொத்தை எழுதி வைக்காமல் பழக்கடைக்காரருக்கு கொடுத்துள்ளார்.

மா என்ற முதியவர் ஒருவர் தனது வீட்டிற்கு அருகேயுள்ள லியூ என்ற பழ வியாபாரியை சில ஆண்டுகளுக்கு முன்பு சந்தித்துள்ளார்.

இருவருக்கும் இடையே நல்ல நட்புறவு ஏற்பட்டுள்ளது.

மா என்ற முதியவரின் மகன் உயிரிழந்து விட அதன்பின்னர் அவரை, லியூதான் நல்லபடியாக பார்த்துக் கொண்டுள்ளார்.

முதியவருக்கு சொந்தக் காரர்கள் இருந்தபோதிலும் அவர்கள் யாரும் கண்டுகொள்ளவில்லை.

முதியவர் மா உயிரிழக்கும் வரையிலும் லியூ அவரை பத்திரமாக கவனித்துக் கொண்டார்.

இந்நிலையில் முதியவர் உயிரிழந்து விட, அவர் எழுதி விட்டு சென்ற உயிலைப் பார்த்த உறவினர்களுக்கு பெரும் அதிர்ச்சி ஏற்பட்டது.

அதாவது தனக்கு சொந்தமான ரூபாய் 3.80 கோடி மதிப்புள்ள வீட்டை, தன்னை கவனித்துக் கொண்ட லியூ பேருக்கு முதியவர் மா எழுதி விட்டு சென்றுள்ளார்.

இதையடுத்து உறவினர்கள் அனைவரும் பழக்கடைக்காரருக்கு எதிராக ஷாங்காய் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தனர்.

மன நலம் பாதிக்கப்பட்டிருந்த நிலையில் அவரை ஏமாற்றி பழக்கடைக்காரர் சொத்தை அபகரித்து விட்டதாக உறவினர்கள் தரப்பில் வாதாடப்பட்டது.

இருப்பினும், 2020ஆம் ஆண்டே, முதியவர் மா தனது வீட்டை எழுதி தந்து விட்டதாக பழக்கடைக்காரர் தெரிவித்து அதற்கான ஆதாரங்களையும் கொடுத்துள்ளார்.

வழக்கை விசாரித்த நீதிமன்றம் பழக்கடைக்காரர் பக்கம் நியாயம் இருப்பதாக கூறி, முதியவரின் உறவினர்கள் தொடர்ந்த வழக்கை தள்ளுபடி செய்தது.

(அ)

# மலையகம் வாழ் தமிழ் மக்களின் பிரச்னை குறித்து விசேட கவனம்

## ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 29

**"மலையக தமிழ் மக்களின் பிரச்னைகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தி, செயல்பட்டு வருகிறோம். அவர்களுக்கு காணி, கல்வி மேம்பாடு உள்ளிட்ட உரிமைகளை வழங்க விசேட திட்டங்களை செயல்படுத்தியுள்ளோம்." _ என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.**



நாட்டில் ஸ்திரமான பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதும் இனப்பிரச்னைக்குத் தீர்வு காண்பதும், இன்று நாடு நிறைவேற்ற வேண்டிய இரண்டு பிரதான பொறுப்புகள் எனவும் எந்தக் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தினாலும் அந்த இரு இலக்குகளை அடைவதில் தன்னுடன் இணையுமாறு அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் மீண்டும் அழைப்பு விடுப்பதாக ஜனாதிபதி கூறினார்.

அத்துடன், நாட்டின் அனைத்து மக்களின் உரிமைகளையும் பாதுகாக்கும் அதேவேளையில், நல்லிணக்கம் தொடர்பான தீர்க்கப்படாத பிரச்னைகளுக்கு விரைவான தீர்வுகளை வழங்க எதிர்பார்ப்பதாகத் தெரிவித்த ஜனாதிபதி, எதிர்வரும் மார்ச் மாதம் அது தொடர்பான விசேட அறிக்கையொன்றை வெளியிட எதிர்பார்ப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

பதுளை குருத்தலாவ முஸ்லிம் மத்திய கல்லூரியின் நூற்றாண்டு விழாவில் கலந்து கொண்ட ஜனாதிபதி ரணில் விக்கிமசிங்க இதனைக் குறிப்பிட்டார்.

ஊவா மாகாணத்தில் அமைந்துள்ள ஒரேயொரு முஸ்லிம் தேசிய பாடசாலையான குருத்தலாவ முஸ்லிம் மத்திய கல்லூரிக்கு விஜயம் செய்த ஜனாதிபதியை பாடசாலை மாணவர்கள் அன்புடன் வரவேற்றனர்.

நூற்றாண்டு விழாவை முன்னிட்டு ஆரம்பிக்கப்பட்ட கல்லூரியின் புதிய இணையத்தளமும் ஜனாதிபதியினால் அங்கு ரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

கல்லூரியின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு வெளியிடப்பட்ட நினைவு சஞ்சிகையை பாடசாலை அதிபர் ஏ.ஏ சமூனினால் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டது.

க.பொ.த சாதாரண தரம் மற்றும் உயர்தரப் பரீட்சைகளில் சிறந்த பெறுபெறுகளைப் பெற்ற மாணவர்களுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பதக்கங்களையும் வழங்கி வைத்தார்.

இதன்போது உரையாற்றிய ஜனாதிபதி,

" வடக்கு, கிழக்கு மாகாணங்களின் பொருளாதாரம் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும். எல்லாப் பிரச்னைகளும் தீர்ந்தாலும், வலுவான பொருளாதாரம் இல்லை என்றால், மீண்டும் அதே பிரச்னைகள் தலைதூக்கும். மலையக தமிழ் மக்களின் பிரச்சனைகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தி, செயல்பட்டு வருகிறோம். அவர்களுக்கு காணி, கல்வி மேம்பாடு உள்ளிட்ட உரிமைகளை வழங்க விசேட திட்டங்களை செயல்படுத்தியுள்ளோம்.

அத்துடன் முஸ்லிம் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்னைகளுக்குத் தீர்வு காண அமைச்சரவையில் கலந்துரையாடி, தேவையான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றோம். கொவிட் காலத்தில் இறந்த முஸ்லிம்களை அடக்கம் செய்வது தொடர்பான பிரச்னை எழுந்தது. அதற்கான வாய்ப்பு அவர்களுக்கு கிடைக்கவில்லை. ஏனைய நாடுகள் அது பற்றிய முடிவுகளை பிற்காலத்தில் மாற்றிக்கொண்டாலும், இலங்கையில் அந்த முடிவுகளை மாற்ற நீண்ட காலம் எடுத்தது.

அதற்கான காரணங்களை ஆராய்ந்து, அத்தகைய நிலைமை மீண்டும் ஏற்படாமல் இருக்க சட்ட ரீதியான ஏற்பாடுகளை செய்ய வேண்டும். இறுதிச் சடங்குகளை எப்படிச் செய்வது என்பது அந்தந்த மதத்தின்படி முடிவு செய்யப்பட வேண்டும். இது குறித்து எதிர்வரும் பெப்ரவரி, மார்ச் மாதமளவில் அறிக்கையொன்றை வெளியிட எதிர்பார்க்கிறேன்." - என்றார்.



# வீதியில் முறிந்து விழுந்தன மரங்கள் இருவர் காயம், 7 வாகனங்கள் சேதம்

கொழும்பு, டிசெ. 29

கண்டியில் இரண்டு மரங்கள் முறிந்து விழுந்ததில் இருவர் காயமடைந்துள்ளதுடன் 7 வாகனங்கள் சேதமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன் தினம் காலை இடம்பெற்ற இந்த சம்பவத்தினால் குறித்த வீதியின் போக்குவரத்து பல மணித்தியாலங்கள் நிறுத்தப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

இதனை அடுத்து பொலிஸார், இராணுவம் மற்றும் கண்டி மாநகர தீயணைப்பு திணைக்கள அதிகாரிகள் இணைந்து மரங்களை அகற்றினர். (அ)

# மருந்து கொள்வனவு; விசாரணை நிறைவு

கொழும்பு, டிசெ. 29

மருந்து கொடுக்கல் - வாங்கல் மற்றும் விநியோகித்தல் தொடர்பில் கணக்காய்வாளர் நாயகத்தால் முன்னெடுக்கப்பட்ட விசேட விசாரணை முடிவுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

விசேட விசாரணையின் அறிக்கையை சுகாதார அமைச்சுக்கு அனுப்ப எதிர்பார்த்துள்ளதாக கணக்காய்வாளர் நாயகம் விக்ரமரத்ன தெரிவித்தார்.

சுகாதார அமைச்சிடமிருந்து அதற்கான பதில் கிடைத்ததன் பின்னர் விசேட விசாரணை அறிக்கை பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்படவுள்ளது.

தரமற்ற மருந்து நாட்டிற்கு இறக்குமதி செய்யப்பட்டமை தொடர்பில் தனது அறிக்கையில் தேடி ஆராய்ந்ததாக கணக்காய்வாளர் நாயகம் தெரிவித்தார். (அ)

# பெரிய வெங்காயம் விலை குறைகிறது

கொழும்பு, டிசெ. 29

பெரிய வெங்காயத்தின் விலை மேலும் குறைவடையும் என பெரிய வெங்காய இறக்குமதியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இதனை அடிப்படையாக கொண்டு பாகிஸ்தானிலிருந்து இந்த வாரம் பெருமளவு பெரிய வெங்காயம் இறக்குமதி செய்யப்பட்டவுள்ளதுடன், அடுத்த மாதம் சீனா மற்றும் நெதர்லாந்திலிருந்து பெரிய வெங்காயம் இறக்குமதி செய்யப்படவுள்ளது.

இதன் காரணமாக பெரிய வெங்காயத்தின் விலை வெகுவிரைவில் குறைவடையும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

நாட்டில் ஏற்பட்டுள்ள பெரிய வெங்காய தட்டுப்பாட்டை தவிர்க்கும் வகையில், பாகிஸ்தான், சீனா, நெதர்லாந்து ஆகிய நாடுகளிலிருந்து பெரிய வெங்காயம் இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுத்துள்ளதாக வெங்காய இறக்குமதியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

மேலும், பாகிஸ்தானிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பெரிய வெங்காயம் ஒரு கிலோகிராமை, 380 ரூபாவிற்கு மொத்த வியாபாரிகள் விற்பனை செய்வதாகவும் இறக்குமதியாளர்கள் கூறுகின்றனர்.



350 ரூபாவிற்கு இறக்குமதி செய்யப்படும் பெரிய வெங்காயமே, இவ்வாறு 380 ரூபாவிற்கு மொத்த வியாபாரிகளுக்கு வழங்கப்படுகிறது.

பெரிய வெங்காயத்தின் சில்லறை விலையாக 405 ரூபா முதல் 420 ரூபா நிர்ணயிக்கப்பட்டுள்ளது. (அ)

# மலையக மக்களை கௌரவித்து முத்திரை வெளியிடுகிறது இந்தியா

கொழும்பு, டிசெ. 29

இந்திய வம்சாவளித் தமிழ் மக்கள் இலங்கைக்கு வருகை தந்து 200 வருடங்கள் பூர்த்தியாகின்ற நிலையில், தமது உரிமைகளை வென்றெடுக்கவும் கௌரவமானதொரு வாழ்க்கையை வாழ்வதற்கும், பல்வேறு போராட்டங்களையும் தியாகங்களையும் செய்துள்ளனர். இவ்வாறானதொரு நிலையில், மலையக மக்களுக்கான அங்கீகாரம் என்பது, இன்றைய சூழ்நிலையில் மாபெரும் தேவையாகவே காணப்படுகின்றது.

இந்நிலையில், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் ஆலோசனையின் பேரிலும் தமிழக பாஜக தலைவர் கே.அண்ணாமலையின் ஏற்பாட்டிலும், மலையக மக்களைக் கௌரவிக்கும் வகையில், இந்திய தபால் துறை அமைச்சினூடாக முத்திரையொன்று வெளியிடப்பட்டு, இலங்கை வாழ் இந்திய வம்சாவளித் தமிழர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர்.

புதுடில்லியில், நாளை நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த நிகழ்வின்போது, பாரதீய ஜனதா கட்சியின் தேசியத் தலைவர் ஜே.பி.நடாவினால், கிழக்கு மாகாண ஆளுநரும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவருமான செந்தில் தொண்டமானிடம் முதல் முத்திரை கையளிக்கப்படவுள்ளது.

இந்திய வம்சாவளித் தமிழர்கள் இலங்கைக்கு இடம்பெயர்ந்தமை தொடர்பான நூற்றுக்கணக்கான ஆவணங்கள், கோப்புகள் பரிசீலக்கப்பட்டு, உரிய வரலாற்றுச் சுவடுகளோடு இந்த முத்திரையை வெளியிடுவதற்கு, இந்தியத் தபால்துறை அமைச்சு நடவடிக்கை எடுத்திருக்கிறது. இதன்மூலம், இலங்கைக்கு இடம்பெயர்ந்த தமிழர்கள் தொடர்பிலான வரலாறு, இந்தியர்களுக்கு எளிதில் எடுத்துரைக்கப்படுகிறது.

இவ்வாறு வெளியிடப்படும் வரலாற்றுச் சிறப்புமிக்க முத்திரையை, உலகின் மிகப்பெரிய அஞ்சல் வலையமைப்பைக் கொண்டுள்ள இந்தியாவின் 155,015க்கும் மேற்பட்ட தபால் நிலையங்களிலிருந்து, எதிர்வரும் 30ஆம் திகதிக்குப் பின்னர் பெற்றுக்கொள்ள முடியும்.

உதவி, கடமை, பொறுப்புணர்வு என்ற எண்ணப்பாடுகளுக்கு அப்பால், நம் மக்களை நாம் தான் கௌரவிக்க வேண்டும், அவர்களுக்கு நாம் தான் அங்கீகாரமளிக்க வேண்டுமென்ற தொனியில், இலங்கை வாழ் இந்திய வம்சாவளித் தமிழர்களுக்காக முத்திரையொன்று வெளியிடப்படுவது, இரு நாடுகளுக்கிடையில் காணப்படும் நட்புறவைப் பறைசாற்றி நிற்பதோடு, மலையக மக்களால் இலங்கைக்கும் கௌரவம் கிடைத்திருக்கிறது.

இவ்வாறானதொரு கௌரவிப்பு நிகழ்வில், கிழக்கு மாகாண ஆளுநரும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவருமான செந்தில் தொண்டமானிடம் முதல் முத்திரையைக் கையளிக்க நடவடிக்கை எடுத்திருப்பது குறிப்பிடத்தக்கது. (அ)

### சாவகச்சேரி பொலிஸாரிடம் சிக்கினார் கஞ்சா வியாபாரி!

யாழ்ப்பாணம், டிசெ. 29

சாவகச்சேரி பொலிஸாரால் கஞ்சா வியாபாரியொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தனங்கிளப்பு பகுதியில் நேற்று முன் தினம் மாலை இவர் கைது செய்யப்பட்டார். ஒரு கிலோகிராம் கேரளா கஞ்சாவும் அவரிடமிருந்து கைப்பற்றப்பட்டது.

மோட்டார் சைக்கிளில் கேரளக் கஞ்சாவை எடுத்துச் சென்ற போது கையும் மெய்யுமாக சிக்கியுள்ளார்.

தனங்கிளப்பு பகுதியை சேர்ந்த 38 வயதான ஒருவரே கைது செய்யப்பட்டார். (அ)

## விஜயகாந்த்...

அத்துடன், இலட்சக்கணக்கான ரசிகர்கள் அவருக்கு அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

இதேநேரம், விஜயகாந்தின் இறுதிக் கிரியைகள் அரசு மரியாதையுடன் இன்று வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளன. அவரின் கட்சியின் தலைமை பணிமனை யில் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்பட வுள்ளது.

**ஈழத் தமிழருக்காக பிறந்தநாள் கொண்டாடுவதை தவிர்த்தவர்**

திரையுலகில் பிரபலம் பெற்றிருந்த காலத்திலேயே விஜயகாந்த் ஈழத் தமிழர் களின் விடுதலைக்காக குரல் கொடுத்தவர். தமிழகத்தில் ஏதிலிகளாக தமிழகத்தில் அடைக்கலம் புகுந்தவர்களுக்கு பல்வேறு உதவிகளையும் ஆதரவையும் வழங்கியி ருந்தார். இதேநேரம், “ஈழத் தமிழர்கள் அழும்போது என்னால் கொண்டாட் டத்தில் இருக்க முடியாது”, என்று கூறி தனது பிறந்தநாள் கொண்டாட்டத்தை தவிர்த்தார்.

தவிர, 1984-ஆம் ஆண்டு ஈழத்தமிழர் கள்மீதான படுகொலையைக் கண்டித்து சக நடிகர், நடிகைகளுடன் ஒருநாள் அடையாள உண்ணாவிரதம் நடத்தி, படுகொலையை நிறுத்தவும், நீதி வேண் டியும் தமிழக ஆளுநரிடம் மனு அளித் தார். 1986ஆம் ஆண்டு இதே காரணங்க ளுக்காக சென்னை வட்டாட்சியர் பணி மனையில் உண்ணாவிரதம் இருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இல்லையென்று தன்னை நாடி வந்தோருக்கு கொடை வழங்கியதன் மூலமும் பெருமை பெற்றவர். இதனால், அவரை தமிழக மக்கள் கறுப்பு எம். ஜி. ஆர். என்று அழைத்திருந்தனர்.

நாராயணன் விஜயராஜ் அழகர்சாமி என்ற இயற்பெயர் கொண்ட விஜயகாந்த், தமிழகத்தின் மதுரையை பூர்வீகமாகக் கொண்டவர். 1979இல் ‘இனிக்கும் இளமை’ என்ற திரைப்படம் மூலம் அறி முகமானார். ‘சட்டம் ஒரு இருட்டறை’ படம் மூலம் பிரபலமான அவருக்கு ‘கேப்டன் பிரபாகரன்’ படம் பெரும் புகழைக் கொடுத்தது. இதன் பின்னர் அவர் ‘கேப்டன்’ என்று ரசிகர்களால் அழைக்கப்பட்டார். 200 வரையிலான திரைப்படங்களில் நாயகனாக நடித்த விஜயகாந்த் 2005ஆம் ஆண்டு தேசிய திராவிட முன்னேற்ற கழகம் என்ற கட்சியை தொடங்கினார். 2011ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநிலத்தின் எதிர்க்கட்சி தலைவராகவும் பதவி வகித்திருந்தார். (ஐ)

## யாழில்...

டெங்கு தொடர்பில் கலந்துரையாடப்பட்டபோதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

“டெங்குவை ஏற்படுத்தும் நுளம்புகள் வீரியம் மிக்க நுளம்புகளாக உள்ளதாக பூச்சியியல் ஆய்வு சுகாதார அதிகாரிகள் சுட்டிக்காட்டுகின்றனர். யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அதிகளவான நோயாளர்கள் இருப்பதால் அதனை சூழவுள்ள பகுதிகளிலுள்ளவர்கள் அதிகளவாக அக்கறையுடன் இருக்க வேண்டும்.

நோய் நிலைமையை கட்டுப்படுத்த மேலததிகமாக அயல் மாவட்டங்களிலிருந்தும் சுகாதாரப் பரிசோதகர்களை வரவழைக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. தற்போது பரவியுள்ள டெங்கு தொற்றானது மூன்றாவது வகை நுளம்பின் மூலமே பரவுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் 150 பேர் நாளாந்தம் டெங்கு சிகிச்சைக்காக வருகின்ற நிலையில் நேற்று 84 பேர் விடுதிகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அத்துடன் இம்மாதம் 1,284 பேர் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றனர்- என்றார். (அ)

## அத்தியாவசியப்...

உருளைக்கிழங்கு கிலோ ஒன்றின் விலை 5 ரூபாயால் குறைக்கப்பட்டு புதிய விலை 280 ரூபாயாக அறிவிக்கப் பட்டுள்ளது.

அத்துடன், சிவப்பு பச்சை அரிசி கிலோ ஒன்றின் விலை 5 ரூபாயால் குறைக்கப்பட்டு 175 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படவுள்ளது.

மேலும், சிவப்பு பருப்பு, வெள்ளை நாட்டரிசி மற்றும் வெள்ளை பச்சை அரிசி ஆகியவற்றின் விலைகள் தலா ஒரு ரூபாயால் குறைக்கப்பட்டுள்ளன.

குறித்த பொருட்களை விலைக்குறைப் புடன் நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து சதொச விற்பனை நிலையங் களிலும் பெற்றுக்கொள்ள முடியுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## புத்தாண்டில்...

சகல அமைச்சர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

வெளிநாடுகளுக்கு பயணம் மேற் கொண்டுள்ள அமைச்சர்கள் இந்த கூட்டத்தில் கலந்துக்கொள்வதற்காக முதல் நாளே இலங்கை திரும்ப உள்ள தாக அரசியல் தரப்புத் தகவல்கள் கூறுகின்றன.

இந்த ஆண்டின் இறுதி அமைச்சர வைக் கூட்டம் கடந்த 18 ஆம் திகதி நடைபெற்றது. நத்தார் விடுமுறை காரணமாக கடந்த வாரம் அமைச்ச ரவைக் கூடவில்லை. (அ)

## கேக் விற்பனை...

வெதுப்பக உற்பத்தியா ளர்களுக்கு கிடைக்கப்பெறாத பட்சத்தில், உள்நாட்டு முட்டைகளை 55 ரூபாவுக்கு கொள்வனவு செய்து தயாரிக்கப்படும் கேக்கின் விலையை குறைப்பது என்பது சாத்தியமற்றது எனவும் அகில இலங்கை வெதுப்பக உற்பத்தியாளர்கள் சங்கத்தின் தலைவர் குறிப்பிட்டுள்ளார். (அ)

## ஜனவரி 10...

அனுப்பியுள்ள நிலையில், இந்த விவகாரத்தை ஆராய நேற்று முன்தினம் கட்சியின் முக்கிய தலைவர்கள் மார்ட் டின் வீதி அலுவலகத்தில் கூடினர்.

இதன்போது, ஜனவரி 10ஆம் திகதி கொழும்பிலுள்ள இரா.சம்பந்தனின் வீட்டில் கட்சியின் அரசியல் குழுக் கூட் டத்தைக் கூட்டி, இந்த சிக்கல் தொடர்பில் ஆராய்வதென்றும், மாநாடு தொடர்பில் இறுதியான தீர்மானத்தை அங்கு எடுப்ப தென்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (அ)

## புத்தாண்டில்...

ஆலோசகர் தனுஜா பெரேரா, வற் வரி அறவீட்டால் எரிபொருள் மற்றும் எரிவாயுவின் விலைகள் அதிகரிக்கும் எனக் கூறினார்.

எவ்வாறாயினும், எரிபொருள் மற்றும் எரிவாயுவுக்கான 7.5 வீதம் அறவிடப்படும் துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் அபிவிருத்தி வரியை நீக்குவதற்கு நிதி அமைச்சு தீர்மானித்துள்ளது. இதனால் பாரிய அளவில் விலைகள் உயர்வடையாது எனவும் அவர் கூறினார்.

”2020ஆம் ஆண்டுமுதல் நாட்டில் கடுமையான பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ளது. தமது உணவு, மருத்து வம் மற்றும் அன்றாட தேவைகளை பூர்த்தி செய்துக்கொள்வதில் கடுமை யான சவால்களை எதிர்கொள்கிறோம். அரசாங்கம் தொடர்ச்சியாக வரிகளையும் அதிகரித்து வருவதால் மேலும் சுமைகளை சுமக்க நேரிட்டுள்ளது” என பொது மக்கள் அதிருத்தியையும் வெளிப் படுத்தியுள்ளனர். (அ)

# விதை உருளைக்கிழங்கு இறக்குமதி; உரிய விசாரணை நடத்துவது அவசியம்

யாழ்ப்பாணம், டிசெ. 29

விவசாய நவீனமயமாக்கல் திட்டத் தின் கீழ் இறக்குமதி செய்யப்பட்ட விதை உருளைக் கிழங்கு தொடர்பில் விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும் என வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் வலியுறுத்தியுள்ளார்.

யாழ்.மாவட்ட அபிவிருத்தி குழு கூட்டத்தின் போதே ஆளுநர் இதனை குறிப்பிட்டார்.

யாழ். மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள டெங்கு அபாய நிலை, கடற்றொழிலா ளர்கள் எதிர்நோக்கியுள்ள சிக்கல்கள், அபிவிருத்தித் திட்டங்கள், மாவட்டத் தில் பொதுமக்கள் எதிர்நோக்கும் பிரச்னைகள் உள்ளிட்ட பல விடயங்கள் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

யாழ். மாவட்ட விவசாயிகளுக்காக இறக்குமதி செய்யப்பட்ட விதை உருளைக்கிழங்கில் பற்றீரியா தொற்று ஏற்பட்டமை தொடர்பில் விவசாய நவீனமயமாக்கல் திட்டத்தின் வட மாகாண பிரதி பணிப்பாளரிடம் ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் கேள்விகளை முன்வைத்தார்.

எவ்வித தரச் சான்றிதழும் இன்றி குப்பிளான் களஞ்சியசாலைக்கு விதை உருளை கிழங்குகள் எவ்வாறு கொண்டுவரப்பட்டன, இதற்கான அனுமதியை வழங்கியது யார்?, தற்போது அவற்றை அழிப்பதற்குரிய செலவுகள், பாதிக்கப்பட்ட விவசாயிக ளுக்கான மாற்று செயற்பாடுகள் போன்ற பல விடயங்கள் தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநர் கேள்விகளை முன்வைத்தார்.

இந்நிலையில் விதை உருளைக்கிழங்கு இறக்குமதியில் மோசடிகள் இடம்பெற் றிருக்க கூடும் என்பதால் அது குறித்து விரிவான விசாரணைகள் முன்னெடுக் கப்பட வேண்டும் என வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் வலியுறுத் தினார்.

இதேவேளை, வடக்கு மாகாணத்தில் அமுல்படுத்த உத்தேசித்துள்ள இருபத் தையாயிரம் வீட்டுத் திட்டம் தொடர் பில் இதுவரை உரிய தெளிவுபடுத்தல்கள் கிடைக்கவில்லை என கூட்டத்தில் கலந்துக்கொண்ட பாராளுமன்ற உறுப் பினர்கள் தெரிவித்தனர்.

இந்த விடயம் தொடர்பில் பாராளு மன்ற உறுப்பினர்களை தெளிவுபடுத் துவதற்கான விசேட கூட்டத்தை விரைவில் ஏற்பாடு செய்வதாக ஆளுநர் குறிப்பிட்டார். (அ)

# 13 தமிழக மீனவர்களுக்கும் ஒத்திவைக்கப்பட்ட சிறை!

யாழ்ப்பாணம், டிசெ. 29

கடற்படையினரை தாக்கிய குற்றச் சாட்டில் விளக்கமறியலில் வைக்கப்பட் டிருந்த 13 தமிழக மீனவர்களும் குறித்த குற்றச்சாட்டில் ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனையுடன் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கை கடற்பரப்பிற்குள் எல்லை தாண்டி மீன் பிடித்த குற்றச்சாட்டில் பருத்தித்துறை கடற்பரப்பில் வைத்து கடந்த டிசெம்பர் 10 ஆம் திகதி 2 படகுகளுடன் காரைக்கால் பகுதியைச் சேர்ந்த 25 மீனவர்கள் கைது செய்யப்பட் டிருந்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர் களில் ஒரு படகில் பயணித்த படகின் உரிமையாளர் உள்ளிட்ட 13 மீனவர்கள், 10 ஆண்டுகள் ஒத்திவைக்கப்பட்ட 18 மாத சாதாரண சிறைத்தண்டனை என்னும் நிபந்தனையுடன் கடந்த 22 ஆம் திகதி விடுதலை செய்யப்பட்டனர்.

எனினும் கைது நடவடிக்கையின் போது மீனவர்களால் தாக்கப்பட்டு இலங்கை கடற்படையினர் மூவர் காயம டைந்தமை தொடர்பான குற்றச்சாட்டில் அவர்களை நேற்று வரை விளக்கமறிய லில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டிருந்தது.

13 தமிழக மீனவர்கள் தொடர்பான குறித்த வழக்கு ஊர்காவற்றுறை நீதிமன் றில் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட நிலையில் 10 ஆண்டு கள் ஒத்திவைக்கப்பட்ட 12 மாத சாதா ரண சிறைத்தண்டனை என்னும் நிபந்த னையுடன் விடுதலை செய்யப்பட்டனர்.

ஏனைய 12 மீனவர்களுக்கு எதிரான வழக்கில், படகின் உரிமையாளரையும் குறித்த வழக்கின் முதலாவது சந்தேக நபராக இணைத்து, சந்தேகநபருக்கு அழைப்பாணை அனுப்புமாறு நீதிமன் றில் கோரிக்கை முன்வைக்கப்பட்டிருந்தது.

இந்த விடயம் தொடர்பில் சட்டமா அதிபர் திணைக்களம் நீதிமன்றில் விளக்கத்தை வழங்க வேண்டியிருப்பதன் காரணமாக அவர்களை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு நீரியல் வளத்துறை திணைக்களத்தினரால் மன்றில் கோரிக்கை வைக்கப்பட்டது.

இதனை ஆராய்ந்த நீதிவான் சந்தேகநபர்களை எதிர்வரும் ஜனவரி மூன்றாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

அதற்கமைய, ஊர்காவற்றுறை நீதி வான் ஜெ. கஜநிதிபாலன் முன்னிலையில் குறித்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது குறித்த 20 இந்திய மீன வர்களும் 5 வருடங்களுக்கு ஒத்திவைக் கப்பட்ட 18 மாத சிறைத்தண்டனை என்னும் நிபந்தனையுடன் விடுதலை செய்யப்பட்டனர். (அ)

# தரமற்ற மருந்துகள் கொள்வனவு; வைத்தியர் ருக்ஷான் வாக்குமூலம்

கொழும்பு, டிசெ. 29

தரமற்ற மருந்துக் கொள்வனவு தொடர்பில் அரசாங்க மருத்துவ அதிகா ரிகள் சங்கத் தலைவர் வைத்தியர் ருக்ஷ ான் பெல்லன நேற்று வியாழக்கிழமை குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் வாக்குமூலம் ஒன்றைப் பதிவு செய்தார்.

குற்றப் புலனாய்வுத் திணைக்கள வளாகத்துக்கு வெளியில் அவர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக் கையில், முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல, சுகாதார அமைச்சின் மேலதிகச் செயலாளர் சமன் ரத்நாயக்க மற்றும் தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரி சபையின் முன்னாள் பிரதம நிறைவேற்று அதிகாரி விஜித் குணசேகர ஆகியோர் இந்த தரமற்ற மருந்து கொள்வனவின் மூளையாக செயற்பட்டதாக அவர் குற்றம் சுமத்தினார்.

இதுவரை, இந்த விவகாரம் தொடர்பாக சுகாதார அமைச்சின் முன்னாள் செயலாளர் ஜனக சந்திரகுப்த, சுகாதார அமைச்சின் மருத்துவ விநியோ கப் பிரிவின் பணிப்பாளர், மற்றும் அதே பிரிவைச் சேர்ந்த மேலும் சில அதிகா ரிகள் இந்த விவகாரம் தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ளமை குறிப் பிடத்தக்கது. (அ)

ஈழநாடு
Eelanadu

# கோட்டாவை வீட்டுக்கு அனுப்பியவர் பஸிலே!

## திலித் ஜயவீர கூறுகிறார்



கொழும்பு, டிசெ. 29

**நாட்டில் பொருளாதார நெருக்கடியை ஏற்படுத்தி நாட்டின் ஜனாதிபதியாக வருவதற்காகவே பஸில் ராஜபக்ஷவால் கோட்டாபய ராஜபக்ஷ விரட்டியடிக்கப்பட்டதாக மௌபிம ஜனதா கட்சியின் தலைவர் திலித் ஜயவீர தெரிவித்துள்ளார்.**

இதன் விளைவாக ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியானார் என்றும், பொதுஜன பெரமுனவும் தேசியவாத முகாமும் அழிக்கப்பட்டதாகவும் அவர் கூறினார்.

பஸில் ராஜபக்ஷவின் ஆட்சிக் கவிழ்ப்பினால் ஏமாற்றமடைந்த பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்கள் குழு தற்போது அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தியில் இணைந்து கொண்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எனக்கு 30 வருட காலம் அரசியலில் அனுபவம் உள்ளது. நான் ஒரு தேசியவாதியாகவே எனது அரசியல் பயணத்தை முன்னெடுக்க விரும்புகிறேன். தேசியவாத அரசியல் தோல்வியடைய காரணம் அதனை முறையாக கையாளவில்லை என்பதாலேயே ஆகும்.

தேசியவாதத்தை தாண்டி ஒரு நாடால் முன்னேற முடியாது. உலகில் உள்ள அனைத்து நாடுகளும் தேசியவாதத்தை பின்பற்றியதால்தான் அவர்களால் வேகமாக முன்னேற முடிந்துள்ளது.

சிலர் தேசியவாதத்தை இனவாதமாக பயன்படுத்தினர். இதனால்தான் எம்மால் தேசியவாதத்தை கையாண்டு எழுச்சியடைய முடியாது போனது. இந்தியா தேசியவாதத்தை பின்பற்றுவதால்தான் இன்று பாரிய அபிவிருத்தியை நோக்கி நகர்ந்துள்ளது-என்றார். (அ)



## கில்மிஷாவுக்கு வரவேற்பு

யாழ்ப்பாணம், டிசெ. 29

சி தமிழ் தொலைக்காட்சியின் பாடல் போட்டி வெற்றியாளர் கில்மிஷா யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையம் ஊடாக நேற்று யாழ்ப்பாணத்தை வந்தடைந்தார்.

இந்தியாவின் சென்னை விமான நிலையத்தில் இருந்து நேற்று நண்பகல் வேளை கில்மிஷா தனது குடும்பத்துடன் நாடு திரும்பினார்.

இதன்போது பெருமளவானவர்கள் விமான நிலையத்தில் குவிந்திருந்து கில்மிஷாவை வரவேற்றனர்.

விமான நிலையத்தில் இருந்து வரவேற்று வாகன தொடரணி மூலம் அரியாலை பகுதிக்கு அழைத்துச் சென்று, அங்கு கௌரவிப்பு நிகழ்வு நடத்தப்பட்டது.

# பொலிஸாரை எச்சரித்த கடற்தொழில் அமைச்சர்!

யாழ்ப்பாணம், டிசெ. 29

யாழ்ப்பாணத்தில் போதைவஸ்து கடத்தலுடன் யார் சம்பந்தப்பட்டாலும் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என கடற்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பொலிஸாரைக் கடுமையாக எச்சரித்தார்.

யாழ் மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் நேற்று போதைவஸ்து விடயம் தொடர்பில் கருத்துரைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அண்மையில் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு போதைப்பொருள் கடத்த முயன்ற ஒருவர் கைது செய்யப்பட்டார். அவரது யாழ்ப்பாணத்தில் உள்ள வீட்டை பொலிஸார் பரிசோதனையிடச் சென்றபோது சோதனையிட அனுமதி வழங்கப்படாமை தொடர்பில் கேள்வி எழுப்பிய அமைச்சர், அவ்வாறு நீங்கள் செயற்பட முடியாது. எவராக இருந்தாலும் நீங்கள் உரிய நடவடிக்கை எடுத்தாகவேண்டும்.

வடக்கு மாகாணத்தில் போதைவஸ்துடன் தொடர்புடையோர் யாருடைய செல்வாக்கையும் பயன்படுத்த முடியாது. யாராக இருந்தாலும் கட்டாயமாக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். பொலிஸார் இந்த விடயத்தில் தவறிழைக்கக்கூடாது. குறிப்பாக என்னுடைய பெயரை பாவித்தால்கூட நீங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்-என்றார். (அ)

## இலஞ்ச, ஊழல் ஆணைக்குழுவின் தலைவராக நீதியரசர் இத்தாவல

கொழும்பு, டிசெ. 29

இலஞ்சம் மற்றும் ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரணை செய்யும் ஆணைக்குழுவிற்கு தலைவர் மற்றும் ஏனைய இரு உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

எதிர்வரும் முதலாம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் இந்த நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இதன்படி, இலஞ்சம் மற்றும் ஊழல் குற்றச்சாட்டுகளின் ஆணைக்குழுவின் தலைவராக நீதியரசர் டபிள்யூ. எம்.என்.பி.இத்தாவல நியமிக்கப்பட்டுள்ளார்.

அத்துடன், சேத்திய குணசேகர மற்றும் கே.பெர்னாட் ராஜபக்ஷ ஆகியோர் ஏனைய உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (அ)

## பிரதேச செயலர்கள் ஒத்துழைக்கவில்லை

### வடக்கு ஆளுநர் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், டிசெ. 29

டெங்கு ஒழிப்பு வேலை திட்டத்தில் பிரதேச செயலர்கள் ஒத்துழைக்கவில்லை என வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ் கவலை வெளியிட்டார்.

நேற்று நடைபெற்ற யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் டெங்கு தொடர்பில் கருத்துரைக்கும் போதே வடக்கு ஆளுநர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் என்பது குப்பைகளை அகற்றுவது மாத்திரமல்ல. கைவிடப்பட்ட காணிகளில் உள்ள நுளம்புகள் பெருகும் இடங்களையும் துப்புரவு செய்ய வேண்டும். இந்த கைவிடப்பட்ட காணிகள் விடயத்தில் பிரதேச செயலர்கள் பூரண ஒத்துழைப்பு வழங்கவில்லை என்பது தான் உண்மை.

நீண்ட காலமாக இந்த விடயத்தைத் தெரியப்படுத்தியும் பிரதேச செயலர்கள் கைவிடப்பட்ட காணி விடயத்தில் பூரண ஒத்துழைப்பு வழங்கவில்லை.

எனவே இது எந்த அளவுக்கு டெங்கு ஒழிப்பு வேலை திட்டத்தின் முன்னேற்றத்தை ஏற்படுத்தும் என்பது கேள்விக்குறி-என்றார். (அ)

## மாஸ்க் அணிவது பாதுகாப்பானது!

### சுகாதார அமைச்சர் வேண்டுகோள்



கொழும்பு, டிசெ. 29

தற்போது நாட்டில் மீண்டும் கொவிட் - 19 தொற்று பரவும் அபாய நிலை ஏற்பட்டுள்ளது. ஆகவே குறித்த பாதிப்பிலிருந்து தற்காத்துக் கொள்வதற்கு மாஸ்க் அணிந்துக் கொள்வது பாதுகாப்பானது என்று சுகாதார அமைச்சர் ரமேஸ் பத்திரன தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கொரோனா வைரஸின் புதிய திரிபான ஜே.என்.01 கடந்த செப்ரெம்பர் மாதம் அமெரிக்காவில் கண்டுபிடிக்கப்பட்டு பின்னர் 41 நாடுகளில் பரவியுள்ளது.

இலங்கையை பொறுத்தவரை அந்த தொற்று பரவும் அபாயம் குறைவாக இருந்த போதிலும் பொதுமக்கள் அவதானமாக செயற்படுவது பாதுகாப்பானதாகும்.

இந்த வைரஸ் திரிபானது அவதானத்திற்குரியது என்று உலக சுகாதார ஸ்தாபனம் அண்மையில் அறிவித்திருந்தது.

இலங்கையில் பரவும் அபாயம் இருக்கின்றதா என்பது தொடர்பில் அதிகாரிகள் உன்னிப்பாக அவதானித்து வருகின்றனர்.

நாட்டில் கொவிட் கட்டுப்பாட்டுக்கான பரந்த தடுப்பூசி திட்டம் அமுலாக்கப்பட்டிருந்தாலும், நாட்டு மக்கள் கொவிட்டில் இருந்து பாதுகாப்பு பெறுவதற்கு மாஸ்க் அணிந்து கொள்வது உகந்தது-என்றார். (அ)

## பணவீக்கம் மீண்டும் அதிகரிக்கும் அபாயம்

### பொருளாதார ஆய்வாளர்கள் எச்சரிக்கை

கொழும்பு, டிசெ. 29

எதிர்காலத்தில் பணவீக்கம் பெரிய அளவில் அதிகரிக்கும் அபாயம் காணப்படுவதாக பொருளாதார ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த பணவீக்கத்தை தாக்கம் மக்களிடையே பாரிய அளவில் இருக்குமெனவும் குறிப்பிட்டுள்ளனர்.

2024 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் பெறுமதி சேர் வரி அதிகரிக்கப்படுவதே இதற்கு முக்கிய காரணமாகும் என பேராதனை பல்கலைக்கழகத்தின் பொருளாதார பிரிவின் சிரேஷ்ட பேராசிரியர் ஆனந்த ஜயவிக்ரம தெரிவித்துள்ளார்.

வரி விதிக்கப்படாத பல்வேறு வகையான பொருட்களுக்கு வரி விதிக்கப்படுவதாலும், ஏற்கனவே வரி விதிக்கப்படும் பொருட்களின் மீதான வரிச்சுமை அதிகரிப்பதாலும் எதிர்காலத்தில் பணவீக்கம் அதிகரிக்கும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்வரும் ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் பெறுமதி சேர் வரி அதிகரிக்கப்படுவதன் விளைவுகளை மக்கள் ஏற்கனவே அனுபவித்து வருவதாகவும் பேராசிரியர் தெரிவித்துள்ளார்.

வெட் வரி அதிகரிப்பினால் பொருட்களின் விலை அதிகரித்துள்ளதை சாதகமாகப் பயன்படுத்திக் கொள்வதற்காக சில வர்த்தகர்கள் ஏற்கனவே பொருட்களை சேமித்து வைத்து பின்னர் விற்பனை செய்வதற்கு முயற்சித்து வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

வரி விதிப்பின் மூலம் வர்த்தகர்கள் தேவையற்ற அனுகூலங்களைப் பெறுவதைத் தடுக்கும் பொறுப்பு அரசாங்கத்திற்கு உள்ளது எனவும் பேராதனை பல்கலைக்கழகத்தின் பொருளாதார பிரிவின் சிரேஷ்ட பேராசிரியர் ஆனந்த ஜயவிக்ரம தெரிவித்துள்ளார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 29.12.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# டீன் எல்கர் அதிரடியாக சதம் தென்னாபிரிக்கா முன்னிலை




செஞ்சூரியன், டிசெ. 29

இந்தியாவுக்கு எதிரான முதல் டெஸ்டில் தென்னாபிரிக்காவின் துடுப்பாட்ட வீரர் டீன் எல்கர் சதம் கடந்து உறுதியான ஆட்டத்தை வெளிப்படுத்த, முதல் இன்னிங்ஸில் அந்த அணி 11 ஓட்டங்கள் முன்னிலை பெற்றது. இந்திய பந்துவீச்சாளர்கள் அவ்வப்போது விக்கெட்டுகள் சரித்தாலும், டீன் எல்கரை வீழ்த்தத் தடுமாறி வருகின்றனர்.

செஞ்சூரியன் நகரில் நடைபெற்று வரும் இந்த டெஸ்ட் போட்டியில் முதல் இன்னிங்ஸில் இந்திய அணி 245 ஓட்டங்களைப் பெற்றது. இதில், கே. எல். ராகுல் சிறப்பாக ஆடி சதம் அடித்திருந்தார். அவர், 14 பௌண்ட்ரிகள், 4 சிக்ஸர்கள் உள்பட 101 ஓட்டங்களுக்கு கடைசி விக்கெட்டாக வீழ்ந்திருந்தார்.

தனது இன்னிங்ஸை தொடங்கிய தென்னாபிரிக்கா அய்டன் மார்க்ரமை ஒரு பௌண்ட்ரியுடன் 5 ஓட்டங்களுக்கு இழந்தது. சிராஜ் வீசிய 4ஆவது ஓவரில் அவர் ராகுலிடம் பிடி கொடுத்தார் கொடுத்தார். அடுத்து வந்த டோனி டி ஜோர்ஸி நிதானமாக ஆடினார்.

டீன் எல்கர் - ஜோர்ஸி இணை இரண்டாவது விக்கெட்டுக்கு 93 ஓட்டங்கள் சேர்க்க, பும்ரா 29ஆவது ஓவரில் அவர்களைப் பிரித்தார். 5 பௌண்ட்ரிகளுடன் 28 ஓட்டங்கள் எடுத்திருந்த ஜோர்சி, விளாசிய பந்தை ஜெய்ஸ்வால் பிடியெடுத்தார். 4ஆவது துடுப்பாட்ட வீரரான கீகன் பீற்றர்சனை 2 ஓட்டங்களுக்கு பெவிலியன் திரும்பச் செய்தார் பும்ரா.

தொடர்ந்து வந்த டேவிட் பெடிங்கம், எல்கருடன் இணைந்தார். இந்த இணை தென்னாபிரிக்க அணியின் ஓட்டங்களை உயர்த்தத் தொடங்கியது. இந்திய பந்துவீச்சாளர்களை சோதித்த இந்த இணைப்பாட்டம் 4ஆவது விக்கெட்டுக்காக 131 ஓட்டங்கள் சேர்த்தது. அரைச்சதம் கடந்த டேவிட் 7 பௌண்ட்ரிகள், 2 சிக்ஸர்கள் உள்பட 56 ஓட்டங்களுக்கு முகமது சிராஜ் வீசிய 61ஆவது ஓவரில் விக்கெட்டைப் பறிகொடுத்தார்.

6ஆவது வீரரான கைல் வெரின் ஒரு பௌண்ட்ரி விளாசிய நிலையில், பிரசித் கிருஷ்ணா வீசிய 62ஆவது ஓவரில் விக்கெட் காப்பாளர் ராகுலிடம் பிடி கொடுத்து நடையைக் கட்டினார். இவ்வாறாக தென்னாபிரிக்கா 5 விக்கெட்கள் இழப்புக்கு 256 ஓட்டங்கள் சேர்த்திருந்த போது, வெளிச்சமின்மை காரணமாக ஆட்டம் தடைப்பட்டது.

இதையடுத்து 2ஆம் நாள் ஆட்டம் முடித்துக் கொள்ளப்பட்டது. எல்கர் 23 பௌண்ட்ரிகளுடன் 140, மார்கோ யான்சென் 3 ஓட்டங்களுடன் ஆட்டமிழக் காமல் இருந்தனர். (ஐ)

# பாகிஸ்தானுக்கு எதிரான டெஸ்ட் ஆஸி. 214 ஓட்டங்கள் முன்னிலை

மெல்பர்ன், டிசெ. 29

அவுஸ்திரேலிய அணிக்கு எதிரான 2ஆவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் பாகிஸ்தான் அணி முதல் இன்னிங்ஸில் 264 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது. பதிலுக்கு துடுப்பெடுத்தாடி வரும் அவுஸ்திரேலிய அணி பாகிஸ்தானை விட 214 ஓட்டங்களால் முன்னிலை பெற்றுள்ளது.




மெல்பர்ன் நகரில் நடைபெற்று வரும் இந்த டெஸ்ட் போட்டியில் முதல் நாள் ஆட்டத்தில் அவுஸ்திரேலிய அணி 66 ஓவர்களில் 3 விக்கெட்கள் இழப்புக்கு 187 ஓட்டங்கள் எடுத்தது. டேவிட் வோர்ணர் 38, உஸ்மான் கவாஜா 42, ஸ்டீவ் ஸ்மித் 26 ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர். மோர்னஷ் லபுஷான் 44, டிராவிஸ் ஹெட் 9 ஓட்டங்களுடன் களத்தில் இருந்தனர் இரண்டாவது நாள் ஆட்டத்தை தொடர்ந்து விளையாடிய அவுஸ்திரேலிய அணி 96.5 ஓவர்களில் 318 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது.

டிராவிஸ் ஹெட் 17 ஓட்டங்களில் ஷகீன் ஷா அப்ரிடி பந்தில் வெளியேறினார். மோர்னஷ் லபுஷான் 155 பந்துகளில், 5 பெண்ட்ரிகளுடன் 63 ஓட்டங்களில் அமீர் ஜமால் பந்தில் ஆட்டமிழந்தார். மிட்செல் மார்ஷ் 41, அலெக்ஸ் கேரி 4, மிட்செல் ஸ்டார்க் 9, அணித் தலைவர் பட் கம்மின்ஸ்13, நதன் லயன் 8 ஓட்டங்களில் நடையை கட்டினர். பாகிஸ்தான் அணி தரப்பில் அமீர் ஜமால் 3 விக்கெட்களையும் ஷகீன் ஷா அப்ரிடி, மிர் ஹம்சா, ஹசன் அலி ஆகியோர் தலா 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

இதையடுத்து விளையாடிய பாகிஸ்தான் அணி 2ஆவது நாள் ஆட்டத்தின் முடிவில் 55 ஓவர்களில் 6 விக்கெட்கள் இழப்புக்கு 194 ஓட்டங்கள் எடுத்தது. தொடக்க வீரரான அப்துல்லா ஷபிக் 109 பந்துகளில், 5 பௌண்ட்ரிகளுடன் 62 ஓட்டங்களும், அணித் தலைவர் ஷோன் மசூத் 76 பந்துகளில், ஒரு சிக்ஸர், 3 பௌண்ட்ரிகளுடன் 54 ஓட்டங்களும் சேர்த்து ஆட்டமிழந்தனர்.

இந்த இணை 2ஆவது விக்கெட்டுக்கு 90 ஓட்டங்கள் சேர்த்து அசத்தியது. இமாம் உல் ஹக் 10, பாபர் அஸாம் 1, சவுத் ஷகீல் 9, ஆகாசல்மான் 5 ஓட்டங்களில் நடையை கட்டினர். முகமது ரிஸ்வான் 29, அமீர் ஜமால் 2 ஓட்டங்களுடன் களத்தில் இருந்தனர். அவுஸ்திரேலிய அணி சார்பில் பட் கமிம்மின்ஸ் 3, நதன் லயன் 2, ஜோஷ் ஹசில்வூட் ஒரு விக்கெட் கைப்பற்றினர். கைவசம் 4 விக்கெட்கள் இருக்க 124 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் நேற்று மூன்றாவது நாள் ஆட்டத்தை தொடங்கியது பாகிஸ்தான் அணி.

42 ஓட்டங்கள் எடுத்திருந்த நிலையில் ரிஸ்வான் ஆட்டமிழந்தார். தொடர்ந்து ஷகீன் ஷா அப்ரிடி, ஹசன் அலி, மிர் ஹம்சா ஆகியோர் ஆட்டமிழந்தனர். முதல் இன்னிங்ஸில் 264 ஓட்டங்கள் எடுத்து சகல விக்கெட்களையும் இழந்தது பாகிஸ்தான். அதனால் அவுஸ்திரேலிய அணி 54 ஓட்டங்கள் முன்னிலையுடன் இரண்டாவது இன்னிங்ஸை தொடங்கியது.

பின்னர் 54 ஓட்டங்கள் முன்னிலையுடன் தனது 2ஆவது இன்னிங்சை தொடங்கிய அவுஸ்திரேலிய அணி சீரான இடைவெளியில் விக்கெட்களை இழந்து தடுமாறியது. அந்த அணி வீரர்கள் வோர்ணர் 6 ஓட்டங்களிலும், மோர்னஸ் லபுஷாக்னே 4 ஓட்டங்களிலும், கவாஜா மற்றும் ஹெட் ரன் எதுவுமின்றியும் ஆட்டமிழந்து ஏமாற்றம் அளித்தனர்.

பின்னர் கைகோத்த ஸ்மித் மற்றும் மிட்செல் மார்ஷ் சிறப்பாக விளையாடி அணியை நிமிர வைத்தனர். சதம் அடிப்பார் என்று எதிர்பார்க்கப்பட்ட மார்ஷ் 96 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். அரைச்சதம் அடித்த நிலையில் 3ஆவது நாள் ஆட்டத்தின் கடைசி பந்தில் ஸ்மித் ஆட்டமிழந்தார். தற்போது வரை அவுஸ்திரேலிய அணி 2ஆவது இன்னிங்ஸில் 62.3 ஓவர்களில் 6 விக்கெட்களை இழந்து 187 ஓட்டங்கள் எடுத்துள்ளது. இதன் மூலம் அவுஸ்திரேலிய அணி 214 ஓட்டங்கள் முன்னிலை பெற்றுள்ளது. (ஐ)

# நியூஸிலாந்துடனான ரி - 20 பங்களாதேஷ் அணி வெற்றி!

நேப்பியர், டிசெ. 29

நியூஸிலாந்து அணிக்கு எதிரான முதல் இருபது - 20 கிரிக்கெட் போட்டியில் பங்களாதேஷ் அணி 5 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.




நேப்பியரில் உள்ள மெக்லீன் பார்க் மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இந்த போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து அணி 20 ஓவர்களில் 9 விக்கெட்கள் இழப்புக்கு 134 ஓட்டங்கள் எடுத்தது. அதிகபட்சமாக ஜேம்ஸ் நீஷம் 48, அணித்தலைவர் மிட்செல் சாண்ட்னர் 23, அடம் மில்ன் 16, டேரில் மிட்செல் 14 ஓட்டங்கள் சேர்த்தனர்.

பங்களாதேஷ் தரப்பில் ஷோரிபுல் இஸ்லாம் 3 விக்கெட்களையும் மெஹிதி ஹசன், முஸ்டாபிஹூர் ரஹ்மான் ஆகியோர் தலா 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

135 ஓட்டங்கள் இலக்குடன் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி 18.4 ஓவர்களில் 5 விக்கெட்கள் இழப்புக்கு 137 ஓட்டங்கள் எடுத்து 5 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. லிட்டன் தாஸ் 40, சௌம்ய சர்கார் 22, நஜ்முல் ஹொசைன் ஷான்டோ 19, தவுஹித் ஹிர்டோய் 19, மெஹிதி ஹசன் 19 ஓட்டங்கள் சேர்த்தனர். டி 20 போட்டிகளில் நியூஸிலாந்து மண்ணில்பங்களாதேஷ் அணி பெற்ற முதல் வெற்றி இதுவாகும்.

இதற்கு முன்னர் நியூஸிலாந்து மண்ணில் அந்த அணிக்கு எதிராக 9 போட்டிகளில் விளையாடி பங்களாதேஷ்தோல்வி கண்டிருந்தது. தற்போதைய வெற்றியால் 3 ஆட்டங்கள் இருபது - 20 தொடரில் பங்களாதேஷ் அணி 1-0 என முன்னிலை வகிக்கிறது. (ஐ)

# அரசியலிலும் திரைத்துறையிலும் சாதித்த விஜயகாந்த்!











தேமுதிக தலைவர் விஜயகாந்த் காலமானார். கொரோனா தொற்றுக்கு சிகிச்சை பெற்று வந்த அவர் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டதாக மருத்துவமனை சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

“நிமோனியாவுக்காக அனுமதிக்கப்பட்ட அவர், வென்டிலேட்டரில் சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது. மருத்துவர்களின் தீவிர முயற்சியும் பலனளிக்காமல் அவர் இறந்துவிட்டார்” என மருத்துவமனை சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக “மருத்துவப் பரிசோதனையில் கேப்டன் அவர்களுக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. மூச்சுவிடுவதில் சிரமம் இருப்பதால் வென்டிலேட்டர் சிகிச்சை கொடுக்கப்படுகிறது” என்று தேமுதிக வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இத்தகைய சூழலில் தேமுதிக நிர்வாகிகளும் தொண்டர்களும் விஜயகாந்தின் இல்லத்தில் குவிந்து வருகிறார்கள்.

கடந்த சில ஆண்டுகளாக உடல்நலம் குன்றியிருக்கும் விஜயகாந்த் பல தருணங்களில் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்திருக்கிறார்.

கடந்த மாதம் மியாட் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட விஜயகாந்த் கடந்த 11-ஆம் தேதி வீடு திரும்பினார். கட்சியின் பொதுக்குழு கூட்டத்திலும் பங்கேற்றார்.

செவ்வாய்க்கிழமையன்று மீண்டும் மருத்துவமனை சென்ற விஜயகாந்துக்கு வழக்கமான மருத்துவப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டதாக கட்சியின் சார்பில் தெரிவிக்கப்பட்டது. இந்த நிலையில் அவர் காலமானார்.

### தலைவர்கள் இரங்கல்

இந்தியப் பிரதமர் நரேந்திர மோதி வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில், ‘விஜயகாந்த் அவர்களின் மறைவு மிகுந்த வருத்தத்தை அளிக்கிறது. தமிழ் திரையுலகின் ஜாம்பவான், அவரது கம்பீரமான நடிப்பு கோடிக் கணக்கானவர்களின் இதயங்களைக் கவர்ந்தது. ஒரு அரசியல் தலைவராக, தமிழ்நாட்டின் அரசியலில் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்திய அவர், மக்கள் சேவையில் அதிகளவு ஈடுபாடு கொண்டிருந்தார்.

அவரது மறைவு ஒரு பெரிய வெற்றிடத்தை உருவாக்கியுள்ளது, அதை நிரப்புவது கடினம். அவர் எனக்கு நெருங்கிய நண்பராக இருந்தார், பல ஆண்டுகளாக அவருடன் எனக்கு இருந்த நட்பை நான் அன்புடன் நினைவு கூர்கிறேன். இந்த சோகமான தருணத்தில், அவரது குடும்பத்தினர், ரசிகர்கள் மற்றும் ஏராளமான தொண்டர்களுக்கு எனது ஆழ்ந்த அனுதாபங்கள். ஓம் சாந்தி.” என்று கூறியுள்ளார்.

தெலுங்கானா மற்றும் புதுச்சேரி ஆளுநர் தமிழிசை சௌந்தரராஜன் தனது எக்ஸ் (ட்விட்டர்) தளத்தின் பதிவில், ‘உடல் நலக்குறைவால் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த தேமுதிக தலைவர்,சகோதரர் கேப்டன் திரு.விஜயகாந்த் அவர்கள் உயிரிழந்த செய்தியறிந்து மிகவும் மனவேதனை அடைந்தேன். அவர் நல்ல திரைப்படக்கலைஞர், நல்ல அரசியல் தலைவர், நல்ல மனிதர், நல்ல சகோதரர், ஒட்டுமொத்தமாக ஒரு நல்லவரை நாம் இழந்து இருக்கிறோம்.” என்று கூறியுள்ளார்.

சிபிஎம் தலைவர் பாலகிருஷ்ணன் தனது இரங்கல் செய்தியில், “அவர் சட்டமன்றத்தில் எதிர்கட்சித் தலைவராக இருந்தபோது, அவருடன் நெருங்கி பழகும் வாய்ப்பு கிடைத்தது. எதையும் நேர்மையாக, தைரியமாக பேசக்கூடியவர். ஒரு எளிய மனிதன் போல பழகுபவர். சில நாட்களாக சிகிச்சையில் இருந்தார், அப்போது நலம் விசாரித்தேன். எவ்வளவோ சிகிச்சைகள் மேற்கொண்டும் அவரைக் காப்பாற்ற முடியாமல் போய்விட்டது. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் எங்களுடைய ஆழ்ந்த இரங்கலை தெரிவித்து கொள்கிறேன்” என்று கூறினார்.

“பெரும் கலைஞனை இழந்துள்ளேன். என் பாடலை அழகாக பாடிய கதாநயகன், என் நீண்ட கால நண்பரை இழந்துள்ளேன். எரிமலை எப்படி பொறுக்கும் என்று சிவந்த கண்களோடு பேசிய அவர் மறைந்து விட்டார். திரையில் நல்லவர், அரசியலில் வல்லவர். சினிமாவிலும் அரசியலிலும் டூப் போடாமல் இருந்தார்.

கலைஞர் மறையட்டும் ,ஜெயலலிதா மறையட்டும், அதன் பிறகு அரசியல் பற்றி யோசிக்கலாம் என்று பலர் யோசித்த போது, அவர்கள் இருக்கும் போதே, எதிர்க் கட்சித் தலைவர் என்ற பதவியை எட்டிவிட்டார். ஒரு மதுரைக்காரரை இழந்து விட்டேன்.

விஜயகாந்த் எதையுமே என்னிடம் மறைத்ததில்லை. எனக்கு பிடித்த தலைவர்கள் பற்றிய பிடிக்காத கருத்துகளை என்னிடம் கூறுவார். பணிவை, கனிவை அவரிடம் இருந்து கற்றுக் கொள்ளலாம். அவருடைய மண்டபம் இடிபடக் கூடாது என்று கலைஞரிடம் வாதிட்டவர்களில் நானும் ஒருவர்.” இவ்வாறு கவிஞர் வைரமுத்து தெரிவித்துள்ளார்.

நடிகர் எம்.எஸ்.பாஸ்கர் பேசியபோது, “என்ன சொல்வதென்றே தெரியவில்லை. மரணம் என்பது அனைவருக்கும் நிச்சயம் உண்டு என தெரியும். அண்ணன் விஜயகாந்த் எத்தனையோ நாட்கள் என்னை அழைத்து வயிறார உணவு அளித்திருக்கிறார். எவ்வளவோ படங்களுக்கு என்னை சிபாரிசு செய்திருக்கிறார். இன்று அவர் இல்லை எனும்போது ஒன்றும் புரியவில்லை. அப்படி ஒரு நல்ல ஆத்மா.

மிகுந்த கம்பீரத்துடன், ஆரோக்கியத்துடன், சுறுசுறுப்புடன் இருந்தவர். உடன் இருந்து அதையெல்லாம் பார்த்துவிட்டு, இப்போது அவர் மறைந்துவிட்டார் என்ற செய்தி கேட்டு அப்படியே அமர்ந்திருக்கிறேன். என்னுடைய தாய் போல தான் அவர், இப்போது அவரைச் சென்று பார்க்கக்கூடிய தைரியம் வருமா எனத் தெரியவில்லை. ஒன்று சொல்ல முடியும், போய் மீண்டும் எங்கள் கேப்டனாக வாருங்கள் என்று சொல்ல முடியும். அவரது ஒரு ரசிகனாக கண்ணீர் அஞ்சலியை அவரது பாதத்தில் சமர்ப்பிக்கிறேன்” என்று கூறினார் நடிகர் எம்.எஸ்.பாஸ்கர்.

காங்கிரஸ் எம்.பி கார்த்தி சிதம்பரம் தனது இரங்கல் பதிவில், “தேசிய முற்போக்கு திராவிடக் கழக கட்சியின் நிறுவனத்தலைவரும் முன்னாள் சட்ட மன்ற உறுப்பினரும், சட்டமன்ற எதிர்க்கட்சித்தலைவரும், திரைப்பட நடிகருமான கேப்டன் திரு. விஜயகாந்த் அவர்கள் உடல் நலக் குறைவால் காலமானார் என்ற செய்தி அறிந்து மிகவும் வருத்தம் அடைந்தேன்.

அவர் என்னுடன் நெருங்கி பழகிய நினைவுகள் இன்றும் என் மனதில் பசுமையாக இருக்கிறது. அன்னாரது குடும்பத்தினருக்கும், ரசிகர்களுக்கும், கட்சி நிர்வாகிகளுக்கும், பொது மக்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன். அன்னாரது ஆன்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றேன்” என்று கூறியுள்ளார்.

### அரசியலிலும் திரைத்துறையிலும் சாதித்த விஜயகாந்த்

தேசிய முற்போக்கு திராவிட கழகம் 2005ம் ஆண்டு தொடங்கப்பட்டது. திமுக, அதிமுக என திராவிட கட்சிகளால் ஆளப்பட்ட தமிழ்நாட்டில் ஒரு புதிய மாற்றாக தேமுதிக அமைந்தது.

திமுக மற்றும் அதிமுகவுக்கு மாற்றாக வந்திருப்பதாக அறிவித்த விஜயகாந்த், 2006 சட்டமன்ற தேர்தல்கள் மற்றும் 2009 மக்களவை தேர்தல்களில் கூட்டணி இல்லாமல் தனியாக போட்டியிட்டார்.

கட்சி தொடங்கி ஓராண்டிலேயே 2006ம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்றத் தேர்தல்களில் 8.4 வீத வாக்குகள் பெற்றிருந்தார். 2009 மக்களவை தேர்தல்களில் 10.3 வீத வாக்குகள் பெற்றிருந்தார்.

ஆனால், அதன் பின் கூட்டணி அரசியலில் ஈடுபட்டார். அப்போது, தேமுதிகவுக்கு கிடைத்த வந்த ஆதரவு சரிந்தது. 2011ம் ஆண்டு சட்டமன்ற தேர்தல்களில் 7.9 வீத வாக்கு சதவீதமும், 2014ம் ஆண்டு மக்களவை தேர்தல்களில் 5.1 வீத வாக்கு சதவீதம் பெற்றது தேமுதிக. அடுத்து நடைபெற்ற 2016ம் ஆண்டு சட்டமன்றத் தேர்தல்களில் 2.4 வீத வாக்குகளும்., 2021ம் ஆண்டு மக்களவை தேர்தல்களில் 0.43 வீத வாக்குகள் பெற்றார்.

### விஜயராஜ், விஜயகாந்தாக மாறியது எப்படி?

மதுரை மாவட்டம், திருமங்கலத்தில் 1952-ஆம் ஆண்டு ஆகஸ்ட் 25-ஆம் தேதி அழகர்சாமி என்ற ரைஸ் மில் முதலாளியின் மகனாகப் பிறந்தார் விஜயராஜ் என்ற விஜயகாந்த். படிப்பில் பெரிதாக ஆர்வமில்லாமல், விஜயகாந்த் தினமும் நண்பர்களுடன் இணைந்து தியேட்டருக்குச் சென்று எம். ஜி. ஆர் திரைப்படங்கள் பார்ப்பது வழக்கம்.

“ஒரு கட்டத்தில் எம்ஜிஆரின் திரைப்படங்களை ஒவ்வொரு காட்சியையும் விளக்குமளவிற்கு சினிமாவின் மீது ஆர்வமானார். அதனைத் தொடர்ந்து, விஜயகாந்த் சென்னைக்குச் சென்று சினிமாவில் சாதிக்க வேண்டுமென முடிவெடுத்துவிட்டார்.” என்று அவருக்கு நெருக்கமானவர்கள் கூறுகிறார்கள்.

சென்னை வந்தவரை தமிழ் சினிமா உடனே அள்ளி அணைத்துக் கொள்ளவில்லை. எங்கு சென்றாலும் விஜயகாந்த் கறுப்பு என அவரது நிறத்தைக் காரணம் காட்டியே பல நிராகரிப்புகளை அவர் எதிர் கொள்ள வேண்டியிருந்தது.

தொடர் முயற்சியால், 1979-ஆம் ஆண்டு எம். ஏ. காஜாவின் இயக்கத்தில் “இனிக்கும் இளமை” என்ற திரைப்படத்தில் நடித்து தன் திரைப்பயணத்தைத் தொடங்கினார்.

எம். ஏ. காஜாவிற்கு விஜயராஜ் என்ற பெயரில் விருப்பமில்லை; அந்தக் காலக்கட்டத்தில் ரஜினிகாந்த் புகழின் உச்சத்திலிருந்ததால் அவரது பெயரிலிருந்த காந்த் என்பதை எடுத்து, விஜயராஜ் என்ற பெயரில் இணைத்து விஜயகாந்த் எனப் பெயர் மாற்றம் செய்தார்.

### திரைத்துறையில் சாதனை படைத்த விஜயகாந்த்

1979ம் ஆண்டு “இனிக்கும் இளமை” என்ற திரைப்படத்தின் மூலம் தமிழ் சினிமாவுக்கு அறிமுகமானார். 1980-ல் வெளியான “தூரத்து இடி முழக்கம்” மற்றும் 1981-ல் வெளியான “சட்டம் ஒரு இருட்டறை” என்ற திரைப்படங்கள் மூலம் மக்கள் மனதில் இடம் பிடிக்க ஆரம்பித்தார் . திரைப்படங்கள் மூலம், கிராமப்புறங்களில் விஜயகாந்துக்கு இருந்த ஆதரவின் காரணமாக அவர் கருப்பு எம் ஜி ஆர் என்று அழைக்கப்பட்டார். இந்த ஆதரவே, அரசியலில் அவரது ஆரம்ப கால வெற்றிகளுக்கு காரணமாக இருந்தது.


1991ம் ஆண்டு வெளியான “கேப்டன் பிரபாகரன்” என்ற திரைப்படத்தின் வெற்றியே, அவருக்கு கேப்டன் என்ற பட்டத்தை பெற்று தந்தது. 1992-ல் வெளியான “சின்ன கவுண்டர்” திரைப்படம் அவரது சினிமா பயணத்தில் முக்கியமான திரைப்படமாகும்.

அவருக்கு 2001ம் ஆண்டு தமிழக அரசு கலைமாமணி விருது வழங்கியது. 2002-ல் வெளியான “ரமணா” திரைப்படத்துக்காக தமிழ்நாடு அரசு திரைப்பட விருது பெற்றார்.

‘வைதேகி காத்திருந்தாள்’, ‘உழவன் மகன்’, ‘கேப்டன் பிரபாகரன்’,’வானத்தைப் போல’, ‘தவசி’, ‘ரமணா’ என இதுவரை 150 திரைப்படங்களுக்கும் மேல் நடித்துள்ள விஜயகாந்த், 1984 ஆம் ஆண்டு மட்டும் ஒரே ஆண்டில் 18 திரைப்படங்களில் நடித்து சாதனை புரிந்தார்.

இயக்குநர் எஸ்.ஏ. சந்திரசேகர் மற்றும் இராம நாராயணன் ஆகிய இருவரும் தான் விஜயகாந்தின் அதிக எண்ணிக்கையிலான திரைப்படங்களை இயக்கினார்கள். அவை பெரும்பாலும் வசூலைக் குவித்தன.

# விஜயகாந்த் வாழ்க்கையின் 10 முக்கிய அம்சங்கள்









நாராயணன் விஜயராஜ் அழகர்சாமி, இதுதான் நடிகர் விஜயகாந்தின் இயற்பெயர். மதுரை மாவட்டம், திருமங்கலத்தில் 1952-ஆம் ஆண்டு ஆகஸ்ட் 25-ஆம் தேதி அழகர்சாமி என்ற ரைஸ் மில் முதலாளியின் மகனாகப் பிறந்தவர். நடிப்பதற்காக சென்னை வந்த பிறகு தனது பெயரை “விஜயகாந்த்” என மாற்றிக் கொண்டார்.

சினிமா வாய்ப்பு இவருக்கு பல கட்ட போராட்டங்களுக்கு பிறகு தான் கிடைத்தது. அவரது முதல் படம், 1979-ஆம் ஆண்டு எம்.ஏ.காஜாவின் இயக்கத்தில் வெளியான “இனிக்கும் இளமை”. அவரது சினிமா வாழ்க்கையில் மிகப்பெரிய திருப்பத்தை ஏற்படுத்திய திரைப்படம் “சட்டம் ஒரு இருட்டறை”. இந்த திரைப்படம் தெலுங்கு, கன்னடம், மலையாளம், இந்தி என பல மொழிகளில் ரீமேக் செய்யப்பட்டது.

அதன் பிறகு தமிழ் சினிமாவின் முன்னணி நடிகராக மாறினார். “புலன் விசாரணை”, “சேதுபதி ஐபிஎஸ்”, “சத்ரியன்”, “கேப்டன் பிரபாகரன்”,’வானத்தைப் போல”, “தவசி”, “ரமணா” என இதுவரை 150 திரைப்படங்களுக்கும் மேல் நடித்துள்ளார் விஜயகாந்த்.

### 54 புதிய இயக்குநர்களை அறிமுகம் செய்த ஒரே நடிகர்.

“தனது சினிமா வாழ்க்கையில் 54 புதிய இயக்குனர்களை அறிமுகம் செய்தவர் நடிகர் விஜயகாந்த். உலக சினிமாவில் இதை வேறு யாரும் செய்திருக்க மாட்டார்கள். அதிகமான புதிய தயாரிப்பாளர்களுக்கும், தொழில்நுட்பக் கலைஞர்களுக்கும் வாய்ப்பு அளித்தவர்”

“சொல்வதெல்லாம் உண்மை திரைப்படம் மூலம் என்னை தயாரிப்பாளராக அறிமுகப்படுத்தியது அவர் தான். இந்த காட்சி எதற்கு, வசனம் எதற்கு, கதையை இப்படி மாற்றலாமா என்றெல்லாம் அவர் பேசமாட்டார். கதையை ஒத்துக் கொண்டு, சம்பளம் வாங்கிவிட்டால் எதையும் பேசாமல், விரைவாக நடித்துக் கொடுத்து விடுவார். மிகச்சிறந்த மனிதர் என்பதைத் தாண்டி ஒரு நல்ல தொழில் முறைக் கலைஞர் விஜயகாந்த்” என்று கூறினார் தயாரிப்பாளர் டி. சிவா.

### பிலிம் இன்ஸ்டிடியூட் மாணவர்களுக்கு வாய்ப்பு அளித்தவர்

பிலிம் இன்ஸ்டிடியூட் மாணவர்கள் உடனான இவரது கூட்டணி தமிழ் சினிமாவில் மிகப்பெரிய வரவேற்பை பெற்றது. 1986ஆம் ஆண்டு வெளியான ஊமை விழிகள் எனும் திரைப்படத்தில், அப்போதைய நடிகர்கள் பலரும் நடிக்கத் தயங்கிய டி.எஸ்.பி தீனதயாளன் என்ற காவல்துறை அதிகாரி வேடத்தில் திரையில் தோன்றினார் நடிகர் விஜயகாந்த்.

தனது இமேஜ் பற்றிக் கவலைப்படாமல், சற்று வயதான வேடத்தில் இந்த படத்தில் அவர் நடித்திருப்பார். இந்த அப்படம் மிகப்பெரிய வெற்றி பெற்று பிலிம் இன்ஸ்டிடியூட் மாணவர்களுக்கு தமிழ் சினிமாவில் மிகப்பெரிய அடையாளத்தை பெற்றுக்கொடுத்தது.

தொடர்ந்து திரைப்பட கல்லூரியிலிருந்து வந்த தொழில்நுட்ப கலைஞர்களுடன் இணைந்து பணியாற்றி உழவன் மகன், செந்தூரப் பூவே, காவியத் தலைவன் போன்ற திரைப்படங்களைக் கொடுத்தார்.

### சண்டைக் காட்சிகளில் டூப் வேண்டாமென மறுத்தவர்

நடிகர் விஜயகாந்தின் திரைப்படங்களில் அதிகம் பேசப்படுவது அவரது சண்டைக்காட்சிகளே. பல திரைப்படங்களில் தனக்கு டூப் வேண்டாம் என மறுத்து, சண்டைக்காட்சிகளில் நடித்துள்ளார். சண்டைக்காட்சிகளில் தனெக்கென ஒரு ஸ்டைலை உருவாக்கியிருந்தார் விஜயகாந்த்.

இதற்கு பின்னால் ஒரு முக்கிய சம்பவம் உள்ளது என அவருக்கு நெருக்கமானவர்கள் கூறுகிறார்கள். “நாளை உனது நாள்” திரைப்படத்தின் படப்பிடிப்பின் போது நடந்த விபத்தில், அவருக்கு டூப் போட்ட ஒரு ஸ்டண்ட் கலைஞர் உயிரிழந்துள்ளார். இந்த சம்பவத்திற்கு பிறகு, இனிமேல் எனக்கான சண்டைக்காட்சிகளில் நானே நடித்துக் கொள்கிறேன், டூப் வேண்டாமென முடிவெடுத்துள்ளார்.

இதற்காக பிரத்யேக சண்டைப் பயிற்சிகளையும் அவர் எடுத்துள்ளார். தனது பெரும்பாலான படங்களில் டூப் போடாமல் நடித்ததால், பலமுறை இவருக்கு தோள்பட்டை இறக்கம் ஏற்பட்டுள்ளது.

### கமல்- ரஜினி அலையில் தனித்து தெரிந்தவர்

1984ஆம் ஆண்டு, விஜயகாந்தின் சினிமா வாழ்க்கையில் மிகவும் முக்கியமான ஆண்டு. அந்த ஒரே ஆண்டில் மட்டும் விஜயகாந்த நடித்த 18 திரைப்படங்கள் வெளியாகின. மிகச்சில நடிகர்களுக்கு இந்த சாதனை உள்ளது.

கமல் ரசிகர்கள், ரஜினி ரசிகர்கள் என்ற தலைமுறை உருவான போது, அதற்கு இணையாக தனக்கென ஒரு தனி ரசிகர் பட்டாளத்தை உருவாக்கியவர் விஜயகாந்த். தனது பல படங்களில் நீண்ட உணர்ச்சிபூர்வமான வசனங்களை, தன்னுடைய பாணியில் ஒரே டேக்கில் பேசி முடிப்பவர் விஜயகாந்த்.

“கிராமங்களில் இவரது படங்கள் வெளியாகும் தினத்தன்று திருவிழாவுக்கு செல்வது போல கூட்டம் கூட்டமாக குடும்பத்துடன் வண்டி கட்டிக்கொண்டு படம் பார்க்கச் செல்வோம்”, என்கிறார் திருநெல்வேலியைச் சேர்ந்த ரசிகர் அறிவுமணி.

### கேப்டன் என்ற பட்டம்

கமல், ரஜினி, சத்யராஜ், பிரபு, கார்த்திக் என அப்போது இருந்த முன்னணி நடிகர்களுக்கு கூட “நூறாவது படம்” என்றாலே தோல்வி தான். ஆனால் நடிகர் விஜயகாந்திற்கு நூறாவது படமான ‘கேப்டன் பிரபாகரன்’ திரைப்படம் மிகப்பெரிய வெற்றி பெற்றது.

1991ஆம் ஆண்டு, ஆர்.கே.செல்வமணி இயக்கத்தில் வெளியான ‘கேப்டன் பிரபாகரன்’ திரைப்படம் வெள்ளிவிழா கொண்டாடியது. அந்த திரைப்படத்திற்கு பிறகு சினிமா துறையிலும், ரசிகர்கள் மத்தியிலும் கேப்டன் என்றே அழைக்கப்பட்டார்.

### நடிகராக இருந்தவர் நடிகர் சங்கத் தலைவரானார்

விஜயகாந்த் 1999-ஆம் ஆண்டு நடிகர் சங்கத் தலைவரானார். அவர் நடிகர் சங்கத் தலைவரானபோது, நடிகர் சங்கம் மிகப் பெரும் கடன் சுமையில் இருந்தது.

அதனை வெளி நாடுகளில் கலை நிகழ்ச்சிகள் நடத்தி அதன் மூலம் கடன்களை அடைத்தார். அதோடு மட்டுமல்லாமல், நலிந்த கலைஞர்களுக்கு, உதவி செய்வதற்காக ஓய்வூதிய திட்டத்தை அறிமுகப்படுத்தி, பெரும் தொகையை வங்கியில் டெபாசிட் செய்தார்.

2002-ஆம் ஆண்டு காவிரி நதி நீர் பிரச்னை உச்சத்தில் இருந்தபோது, அனைத்து நடிகர்களையும் ஒன்றிணைத்து “நீர் தராத கர்நாடகாவுக்கு மின்சாரம் இல்லை” என்ற போராட்டத்தை நெல்லையில் நடத்தினார்.

### மனிதாபிமானமிக்க நடிகர்

விஜயகாந்த் குறித்து ஒருமுறை பேசிய நடன இயக்குனர் பிருந்தா, “விஜயகாந்த் சினிமா படப்பிடிப்புத் தளங்களில் ஒழுக்கத்தினைக் கடைப்பிடிப்பார். அவரது “ஷாட்” முடிந்தவுடன் சென்று கேரவனில் அமர மாட்டார்.” என்றார்.

“விஜயகாந்த் போன்று ஒரு நல்ல மனிதரைப் பார்க்கவே முடியாது. அவர் நடிகர் சங்கத் தலைவராக இருந்தபோது, நடிகர் சங்கத்தின் கடன்களை அடைக்க வெளிநாடுகளில் நடைபெறும் கலை நிகழ்ச்சிகளுக்குச் செல்லும்போது, நடன

(16ம் பக்கம் பார்க்க)

# விஜயகாந்த் வாழ்க்கையின் 10 முக்கிய...

(15ம் பக்கத் தொடர்ச்சி)

இயக்குனர்களையும், நடனக் கலைஞர்களையும் மிகவும் அன்போடு கவனித்துக் கொள்வார்.”

“நடன இயக்குனர்களுக்கு சிங்கப்பூரிலிருந்து, மலேசியாவிற்குச் செல்லும் போது விமான டிக்கெட்டுகளையே முன்பதிவு செய்து கொடுத்தார். நடனக் கலைஞர்கள் தானே என அவர் எங்களை பேருந்தில் பயணம் செய்யவிடவில்லை. மிகவும் அற்புதமான மனிதர்” என்றார்.

**இளம் நடிகர்களுக்கு கைகொடுத்தவர்**

இயக்குனர் எஸ்.ஏ.சந்திரசேகர் இயக்கத்தில் நடிகர் விஜய் நடிப்பில் 1993இல் வெளியான திரைப்படம் “செந்தூரப் பாண்டி”. இந்த படத்தில் விஜய்க்கு அண்ணனாக, கவுரவ வேடத்தில் தோன்றியிருப்பர் நடிகர் விஜயகாந்த்.

இதேபோல 1999இல் “பெரியண்ணா” என்ற திரைப்படம், அப்போது வளர்ந்து வரும் நடிகராக இருந்த சூர்யா நடித்த திரைப்படம். அதிலும் ஒரு கவுரவ வேடத்தில் தோன்றியிருப்பர் நடிகர் விஜயகாந்த்.

“சூர்யா நடிப்பில் வந்த மாயாவி திரைப்படத்தில் ஒரு சிறப்பு தோற்றத்திற்காக அவரிடம் பேசியபோது, உடனே ஒத்துக்கொண்டார். பொதுவாக அவரைப் போன்ற பெரிய நடிகர்கள் அவ்வளவு எளிதாக நடிக்க ஒத்துக்கொள்ள மாட்டார்கள். அடுத்த நாளே, ஏவிஎம் ஸ்டூடியோவில் தான் நடித்துக் கொண்டிருந்த படத்தின் உணவு இடைவெளியில் எங்களுக்கான பகுதியை முடித்து கொடுத்தார்” என மாயாவி திரைப்படத்தின் இயக்குனர் சிங்கம் புலி ஒரு பேட்டியில் கூறியிருந்தார்.

**“ஏழை எளியவர்களுக்கு உதவுவதில் விஜயகாந்த் போல் யாரும் இல்லை”**

விஜயகாந்த் குறித்து ஒருமுறை பேசிய நடிகர் ரமேஷ் கண்ணா, “விஜயகாந்த்





கட்சி ஆரம்பித்தபோது, நான் இணைந்து கொள்ள விருப்பப்பட்டேன். அவர் என்னை அழைத்து நீ என் கட்சியில் சேர்ந்தால் ஒரு சார்பாளனாகிப் போவாய். நீ எல்லாருக்கும் பிடித்தவனாக இரு என அறிவுரை வழங்கினார்.” என்றார்.

“பெரும்பாலான உதவி இயக்குனர்களுக்கு சாப்பாடு இருக்காது. வறுமை தான். அப்பொழுதெல்லாம் கண்ணை மூடிக் கொண்டு நாங்கள் நடிகர் விஜயகாந்த் வீட்டிற்குச் செல்வோம். அதே போல், அவர் என்ன உணவு உண்பாரோ அதே உணவைத் தான் அனைவருக்கும் வழங்கச் சொல்வார்.”

“படப்பிடிப்புத் தளத்திலும் இதே தான், லைட் யூனிட்டிலிருந்து, சவுண்ட் யூனிட்டிலிருந்து அனைவருக்கும் ஒரே சாப்பாடு தான் வழங்கச் சொல்வார். படப்பிடிப்புத் தளத்தில் பாகுபாடு பார்க்காமல் அனைவருடனும் அமர்ந்து ஒன்றாக உணவு உண்பார்” என்றார்.

**வறுமை ஒழிப்பு தினமாக கொண்டாடப்பட்ட விஜயகாந்தின் பிறந்தநாள்**

சினிமாவில் பல உச்சங்களைத் தொட்ட விஜயகாந்த் 2005-ஆம் ஆண்டு, செப்டம்பர் 14-ஆம் தேதி மதுரையில் மாபெரும் மாநாடை நடத்தி, அதில், ”தேசிய முற்போக்கு திராவிடர் கழகம்” என்ற தனது கட்சியின் பெயரையும் அறிவித்தார். அதனைத் தொடர்ந்து விஜயகாந்த் சினிமாவுக்கு முழுக்குப் போட்டுவிட்டு முழுநேர அரசியலில் இறங்கினார்.

விஜயகாந்த் 2006-இல் கட்சி தொடங்கிய பிறகு, ஒவ்வொரு வருடமும் அவரது பிறந்த நாளை ‘வறுமை ஒழிப்பு தினமாக’ கடைபிடித்து வந்தார்.

அந்நாளில் தேசிய முற்போக்கு திராவிட கழகத்தின் நிர்வாகிகளும், தொண்டர்களும் விஜயகாந்தின் வழியைப் பின்பற்றி ஏழை, எளிய மக்களுக்கான நல திட்ட உதவிகளை ‘இயன்றதைச் செய்வோம் இல்லாதவர்க்கே’ என்ற முழக்கத்தோடு செய்து வருகின்றனர்.

●

